


வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
# கல்முனை NET
kalmunainet.com
e paper




தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
பிலவ வருடம் ஆவணி 22 (28.08.2021) இதழ் : 28

# மட்டு மாவட்டத்தில் கொரோனா உயிரிழப்பு 201 ஆக அதிகரிப்பு !

## ஒரே நாளில் எட்டு பேரை காவு கொண்டது!
## வீட்டை விட்டு வெளியேற வேண்டாமென எச்சரிக்கை!!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலயத்தில் கொரோனா வினால் 8 பேர் உயிரிழந்துள்ளனர். இதனைத்தொடர்ந்து இந்த மாவட்டத் தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 201 ஆக அதிகரித்துள்ளதுடன் 209 கொரோனா தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நா. மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

02

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீடிப்பு

02

## கல்முனை பிராந்தியத்தில் அதிகூடிய தொற்றாளர்கள்!



### இதுவரை 140 மரணங்கள்!! இந்த வாரத்தில் 16 உயிரிழப்புகள்!!!

புவிநேசராசா கேதீஸ்

கல்முனை பிராந்தியத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 55 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு மரணம் பதிவாகியுள்ளது. இது வரை 140 மரணங்கள் நிகழ்ந் துள்ளன. இந்த வாரத்தில் அதிகளாவான

தொற்றாளர்கள் இனங் காணப்பட்டிருந்தனர். இது வரை இல்லாத

02



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீ. தியாகேந்திரனினால், கொவிட்-19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு அறக்கட்டளைக்கு, நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 10 மில்லியன் நிதிக்கான காசோலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பணிக் குழாம் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால், நேற்று (27) முற்பகல், ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இது தொடர்பான காசோலை கையளிக்கப்பட்டது.

## ஆலையடிவேம்பு பிரதேச செயலர் பிரிவில் நேரில் சென்று 2000 ரூபாய் உதவித்தொகை கையளிப்பு



(வி.சுகிர்தகுமார்)

எந்தவொரு மாதாந்த உதவிப் பணமும் பெறாத குடும்பங்களின் வாழ்வாதாரத் திற்காக அரசாங்கம் 2000 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கி வருகின்றது.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 22 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப் பட்ட குடும்பங்களுக்கு

02

## கல்முனையில் வீடு வீடாக சென்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்



(ஏ.எல்.எம்.ஸினாஸ், எம்.என்.எம்.அப்றாஸ் )

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ. சுகுணனின் நெறிப்படுத்தலில் சுகாதார வைத்திய அதி காரி பிரிவுகளில் நடமாடும் தடுப்பூசி செலுத் தும் பணி இடம் பெற்று வருகின்றது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஆர். எம். அஸ்மியின் வழிகாட்டலில் தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக

02

## மழைக் காலநிலை சில தினங்கள் நீடிக்கும்

இலங்கையின் மேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட் டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ இற்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவி யல் திணைக்களம் அறிவித்துள்ளது.

02

## ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்கு ரூ. 5 கோடி சிறப்புத் திட்டங்களை அறிவித்தார் ஸ்டாலின்



(நமது நிருபர்)

இலங்கை தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ரூ.5 கோடி வழங்கப்படும் என்று சட்டசபையில் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். ரேசனில் இலவச அரிசி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள் ளார்.

இலங்கையில் நடைபெற்ற போர் காரணமாக இலங்கை தமிழர்கள் ஏராளமா னோர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர்.

இலங்கை தமிழர்கள் வசிப்பதற்காக தமிழகத்தில் பல இடங்களில் அகதிகள் முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த முகாம்களில் இலங்கையில் இருந்து வந்த அகதிகள் வசித்து வருகிறார்கள். இலங்கை அகதிகள் முகாமில் உள்ள வீடுகள், சாலைகள் சேதம் அடைந்திருப்பதாக ஏற்கனவே பல முறை புகார்கள் வந்தன.

மேலும் இலங்கை அகதிகள் முகாமில் உள்ள குழந்தைகள் கல்வி கற்க முடியாமல் திண்டாடினார்கள். எனவே இலங்கை தமிழர்களின் முகாம்களை மேம்படுத்தவும், அவர்களுக்கு

02

## 2 மில்லியன் தடுப்பூசிகள் இன்று வருகை

இலங்கையினால் கொள்வனவுக்காக கோர பட்டுள்ள மேலும் 2 மில்லியன் Sinopharm கொவிட்-19 தடுப்பூசி டோஸ்கள் இன்று இலங்கை வந்தடையவுள்ளன.

இதேவேளை, இலங்கை பாதுகாப்பு படையினருக்காக சீன தேசிய பாதுகாப்பு அமைச்சினால் அன்பளிப்பாக வழங்கப்பட் டுள்ள 3 இலட்சம் Sinopharm தடுப்பூசி டோஸ்களும் இன்று(28) இலங்கையை வந்தடையவுள்ளது.

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட உத்தியோக பூர்வ விஜயத்தின் போது பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற

02

# கொவிட் -19 மரணங்களின் எண்ணிக்கை 8,000 ஐ கடந்தது

# ஒரே நாளில் 200க்கும் அதிக மரணங்கள் பதிவு

(நமது நிருபர்)

நாட்டில் கொவிட் -19 தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8, 000 ஐ கடந்துள்ளது. இலங்கையில் கொவிட் -19 தொற்று பரவல் ஆரம்பித்த நாள் முதல் கடந்த 15 மாதங்களில் இதுவே அதிகளவான கொவிட் -19 மரணங்கள் பதிவாகின. நேற்று முன்தினம் வியாழக்கிழமை 209 கொவிட்-19 மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டன.

இலங்கையில் நாளொன்றில் 200 க்கும் அதிக கொவிட் -19 மரணங்கள் பதிவானமை இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

நேற்றைய தினம் உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 163 மரணங்கள் 60 வயதுக்கு மேற்பட்டோருடையதாகும். இதேபோன்று 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 46 பேர் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய கொவிட் -19 தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8157 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில் தற்போது உபயோகிக்கப்படும் கொவிட் 1-9 தடுப்பூசிகள் தொடர்பில் பஹ்ரைனில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் தகவலை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் நீலிகா மலவிகே வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் கொவிட் -19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், தொற்றால் உயிரிழப்பவர்களின் மரண வீதமானது, தடுப்பூசி பெற்றுக் கொண்டோரின் வீதத்தை விட அதிகரிக்கும் என்று தெரிய வந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

## பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை ஏற்கும் திகதி நீடிப்பு

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் உயர் தரப் பரீட்சை ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி எதிர்வரும் 15 செப்டம்பர் 2021 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்

## நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிரடிப்படை சுற்றிவளைப்பு

நாட்டின் பல பகுதிகளிலும் விசேட அதிரடிப்படையினரால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களில் சட்டவிரோத மதுபானம், ஹெரோயின், கேரள கஞ்சா, கொக்கேய்ன் உள்ளிட்ட போதைப்பொருட்கள் மற்றும் சட்ட விரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சிகரட் என்பவற்றுடன் பெண் ஒருவர் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மழைக் காலநிலை...

நாட்டின் தென்மேற்கு பகுதியில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை அடுத்த சில நாட்களுக்கும் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக, திணைக்களம் அறிவித்துள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வட மேல், தென் மாகாணங்களிலும் திருகோணமலைமாவட்டத்திலும்காற்றின்வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## 2 மில்லியன் தடுப்...

ஜெனரல் கமல் குணரத்னவினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை பாதுகாப்பு படையினருக்காக சீன தேசிய பாதுகாப்பு அமைச்சினால் இந்த தடுப்பூசிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சீன பாதுகாப்பு அமைச்சரின் மேற்படி விஜயத்தின்போது, இரு நாட்டு உயர் அதிகாரிகளுக்கு இடையில் இடம்பெற்ற இருதரப்பு கலந்துரையாடலின்போது கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு படையினர் பெரும் பங்கு வகிப்பது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டியிருந்தார். இதற்கமையவே இந்தத் தடுப்பூசிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது

## கல்முனையில் வீடு வீடாக...

உத்தியோகத்தர்கள் கல்முனை பிரதேசத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட இது வரைதடுப்பூசி பெறாத நபர்கள், தடுப்பூசி நிலையங்களுக்கு வந்து தடுப்பூசியினை பெற முடியாதவர்களுக்கான தடுப்பூசி வீடுகளுக்கு நேரடியாக சென்று செலுத்தும் நடவடிக்கை நேற்று (27) இடம்பெற்றது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள், பொதுசுகாதார பரிசோதகர்கள், செயலணி பயிற்சியாளர்கள் என பலரும் கலந்து கொண்டு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## மட்டு மாவட்டத்தில் உயிரிழப்பு...

ஆரையம்பதி, கோறளைப்பற்று மத்தி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா 2 உட்பட 4 பேரும், களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, வவுணதீவு, மட்டக்களப்பு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா ஒருவர் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, மட்டக்களப்பில் 72 பேரும், களுவாஞ்சிக்குடியில் 53 பேரும், செங்கலடியில் 25 பேரும், வெல்லாவெளியில் 22 பேர் உட்பட மாவட்டத்திலுள்ள ஏனைய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் உட்பட 201 பேர் கடந்த 24 மணித்தியாலயத்தில் கொரோனா தொற்று உறுதி கண்டறியப்பட்டுள்ளது.

இந்த தொற்றினால் 20 வயது தொடக்கம் 40 வயது வரையில் 9 பேரும், 40 வயது தொடக்கம் 50 வயதுவரை 16 பேரும், 50 தொடக்கம் 60 வயதுவரையில் 39 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டோர் 137 பேரும் உயிரிழந்துள்ளதுடன் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் 86 வீதமானோர் உயிரிழந்துள்ளதுடன், 55 வீதமான ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் 2400 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இருந்தபோதும் கடந்த வாரத்தில் மட்டும் 2093 பேர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

சராசரியாக ஒரு நாளில் 300 க்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன் 5க்கு மேற்பட்ட மரணங்களும் இடம்பெற்றுவருகின்றன. தற்போது 3456 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அவர்களில் 2600 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்;.

எனவே, இந்த கொரோனா தொற்றை கட்டுப்பாட்டில் கொண்டுவர மக்கள் சமூகபொறுப்புடன் நடந்தால் மாத்திரம் இதனை கட்டுப்படுத்த முடியும். இருந்தபோதும், தற்போது ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில், வீதிகளில் பொதுமக்கள் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றதென அவர் தெரிவித்தார்.

## தனிமைப்படுத்தல்...

(நமது நிருபர்)

தற்போது நாடு முழுவதும் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அடுத்த மாதம் 06ஆம் திகதி வரை மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்ற கொவிட்-19 ஜனாதிபதி செயலணி கூட்டத்தை தொடர்ந்து குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் ஊரடங்கை தங்களது மனதுக்கு எடுக்காத நிலைமையை அவதானிக்க முடிந்துள்ளதாகவும், இவ்வூரடங்கு உத்தரவை பயனுள்ளதாக அமைக்கும் பொருட்டு, தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள அவர், வீட்டிலிருந்து பணியாற்றுதல் உள்ளிட்ட விடயங்களை கடைப்பிடிப்பதன் மூலம் ஊரடங்கு விதிகளை முறையாக பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

கொவிட்-19 தொற்று மற்றும் மரணங்களின் அதிகரிப்பு காரணமாக, பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி இரவு 10.00 மணி முதல் ஓகஸ்ட் 30ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரையான 10 நாட்களுக்கு நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

## கல்முனை பிராந்தியத்தில்...

வகையில் இந்த வாரத்தில் ஒரே நாளில் அதி கூடிய தொற்றாளர்கள் எண்ணிக்கையாக 181 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

பொதுமக்கள் நிலைமையினை புரிந்து கொண்டு மிகவும் கவனமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடக்க வேண்டும். அமுல்படுத்தப்பட்டுள்ள பொது முடக்கத்தின் அவசியத்தை உணர்ந்து நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது வரை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் சேர்ந்த 1158 பேர் தொற்றுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். 709 பேர் வீடுகளில் இருந்து சுகாதார பிரிவின் கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவித்தார்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## அறிவியல் வீழ்ச்சி ஏற்படும்...

திண்டாடுகிறது. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதா? அல்லது மருந்துகளை இறக்குமதி செய்வதா? என்ற பாரிய தேசிய நெருக்கடிக்குள் அரசு இருக்கிறது.

கண்ணுக்குத் தெரியாத உயிரியினால் ஏற்பட்டிருக்கும் இந்த அவலத்துக்கு, கூட்டுப் பொறுப்புடன் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். அரசியலுக்கு அப்பால் செயல்பட வேண்டிய காலம் இது.

அவல நிலையில் நாடு தவிக்கிறது. இந்நிலையில், எம்மை பாதுகாப்பதா? அல்லது தேசத்தைப் பாதுகாப்பதா? நமது எதிர்காலத்தை நோக்கி நாம் எழுப்பும் கேள்வி இது.

போகின்ற போக்கில் நாட்டில் அறிவியல் வீழ்ச்சி ஏற்படும் நிலை உருவாகலாம். வருடக் கணக்கில் பாடசாலைகள் செயல்படவில்லை. கல்விக் கூடங்களும் இல்லை. இதனால் இளம் கல்விச் சமூகம் ஒன்று பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாடசாலை கல்வி என்பது கேள்விக்குறியாகி இருக்கிறது. இது தொடர்பில் எவரும் சிந்திப்பதில்லை. இது பாரிய அவலம் மட்டுமல்ல, கல்விச் சமூகம் ஒன்றை மளுங்கடித்திருக்கிறது. அதாவது, அறிவியலில் ஏற்படும் வெற்றிடம் நாட்டை வெகுவாகப் பாதிக்கும்.

இப்போதைக்கு இது புரியாவிட்டாலும் எதிர்காலம் நமக்கு பதில் சொல்லும்.

நாடு இருக்கும் பரிதாப நிலையில், இப்போதைய நிலையை நாம் கடந்து போய் விடலாம். அல்லது சமாளித்தும் விடலாம். கொரோனா என்ற கொடிய உயிரியில் இருந்து, தற்காத்துக் கொள்வதும், உணவும் இருந்தால் இப்போதைக்கு போதுமானது. ஆனால், இப்படியே போனால் முடிவும் விளைவும் ஆரோக்கியமாக அமைந்து விடாது. எல்லாமே கடந்து போகும் என்ற சிந்தனையில் எதிர்காலத்தையும் நாம் கடத்திவிட முடியாது.

இது உலக நெருக்கடி என்றாலும், எதிர்காலத்தை நாமே தீர்மானிக்க வேண்டும்.

## ஈழத் தமிழர்களின்...

நலஉதவிகளைவழங்கவும்முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்தார்.

இதையடுத்து தமிழக சட்டசபையில் இன்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் 110-வது விதியின்கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு பேசினார்.

அவர் பேசியதாவது, இலங்கை தமிழர்களுக்கு ரேஷன் கடைகளில் விலையில்லா அரிசி வழங்கப்படும்.

ஆண்டுதோறும் இலங்கை தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ரூ.5 கோடி வழங்கப்படும். கல்விக்காக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்களின் அகதிகள் முகாம்களில் வீடுகள், சாலைகள் சீரமைக்கப்படும்.

இலங்கை தமிழர்களின் நலனுக்காகவும், முகாம்களை மேம்படுத்துவதற்காகவும் ஆண்டுதோறும் ரூ. 6 கோடி என ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் பேசினார்

## ஆலையடிவேம்பு பிரதேச....

அரசின் உதவிப் பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன்; ஆலோசனைக்கு அமைவாக கிராம மட்ட கள உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று அரசின் பயணத்தடை கால உதவித் தொகை பணத்தினை நேற்று முதல் வழங்கி வருகின்றனர்.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேசத்தில் அரசின் சுற்று நிருபத்திற்கு அமைவாக அரசிடமிருந்து எந்தவொரு மாதாந்த உதவிப் பணமும் பெற்றுக் கொள்ளாத சுமார் 700 வறிய குடும்பங்களில் முதல் கட்டமாக 500 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா உதவிப் பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கல்முனை NET
kalmunainet.com
e paper

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 77 6965343
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com
ceditorsaga@gmail.com

குறள் விருந்து

**அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்.**

எந்த அளவுக்கு நன்மை கிடைக்கும் அல்லது தீமை ஏற்படும் என்று விளைவுகளைக் கணக்குப் பார்த்த பிறதே ஒரு செயலில் இறங்க வேண்டும்.

# அறிவியல் வீழ்ச்சி ஏற்படும் அபாயம்

நாடுதழுவிய தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு இருக்கிறது. பெருநகரங்கள் பெரும்பாலும் முடங்கிக் கிடக்கின்றன. மக்கள் ஆங்காங்கே கூடுவதும் சேருவதும் ஓரளவு குறைந்து தான் இருக்கின்றன. குறிப்பாகச் சொன்னால் நிலைமையை உணர்ந்து தான் மக்களும் செயல்படுகிறார்கள் என்ற உணர்வு சமூக வெளிப்பாடாக தெரிகிறது. இராணுவத் தளபதியும் இதனை ஊர்ஜிதம் செய்து மக்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்.

என்றாலும் தினமும் உயிரிழப்பு 200 அண்மிக்கும் அவலம் கிலி கொள்ளச் செய்கிறது. மக்கள் வீடுகளுக்குள் முடங்கிப் போயிருக்கும் நிலையிலும் தொடர்ந்தும் மரணங்களும் தொற்று எண்ணிக்கையும் சற்றும் குறையாமல் இருப்பது அச்ச மனநிலையைத்தான் தோற்றுவித்திருக்கிறது. இதனால், மக்கள் உளவியல் ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் சுகாதார தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

நிலைமை எகிறும் நெருப்பாக இருந்த போதும், அரசு நாட்டை முழுமையாக முடக்குவதற்கு விரும்பவில்லை. இணங்காமல் இணங்கிய நிலையில் தான் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. பொறுப்புள்ள அரசுக்கு மக்களின் உயிரும் முக்கியம்; நாட்டின் பொருளாதாரமும் முக்கியம். மருத்துவர்களின் கோரிக்கையும் விஞ்ஞான ரீதியான அறிவுறுத்தல்களும் பொறுப்புடன் கூடிய அவர்களது கடமை. நாட்டை முடக்கு முடக்கு என்று கூறிய எதிர்க் கட்சியின் கோரிக்கைகளையும் கோஷங்களையும் பொறுப்பு என்று எடுப்பதா? அல்லது அவர்களது கடமை என்று கொள்வதா? நாடு தேசிய நெருக்கடியை எதிர் கொள்ளும் வேளையில், எதிரணிக்கும் ஒரு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

அழுத்தங்களைக் கொடுத்துத்தான் அரசை அடிபணிய வைக்க முடியுமென்ற தன்நிலையில் எதிர் அணி வெற்றி பெற்றிந்தாலும், இந்த முடக்கத்தின் மூலம் இவர்கள் எதிர்பார்ப்பது என்ன? உயிரிழப்புகளை குறைக்க இதுதான் ஒரே வழி என்ற அவர்களது நிலைப்பாடு ஏற்புடையதுதான். உலகம் இதைத்தான் பின்பற்றியது என்றாலும், இப்போது நாடுகள் திறந்துவிடப்பட்டு இருக்கின்றன. முடக்கி வைப்பதனால் கொரோனா வைரஸை கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாது என்பது அவர்களது இப்போதைய நிலைப்பாடு.

என்றாலும், நமது நாடு முடக்கப்பட்டு இரண்டு வாரங்கள் நெருங்கும் நிலையிலும், உயிரிழப்புகளில் எந்தவொரு வீழ்ச்சி நிலையையும் காணமுடியவில்லை. மீள முடியும் என்ற நம்பிக்கையை தவிர, நம்மிடம் இப்போதைக்கு வேறொன்றும் இல்லை.

தடுப்பூசி ஏற்றுவதில் அரசு காட்டும் கூடுதல் அக்கறையை, உலக சுகாதார ஸ்தாபனமும் வெகுவாகப் பாராட்டி இருக்கிறது. தொற்றை முழுமையாக குறைக்க முடியாவிட்டாலும், உயிரிழப்பையாவது மட்டுப்படுத்தலாம் என்பது மருத்துவர்களின் ஆலோசனையாகவும் இருக்கிறது. ஆகவே, அச்சம் தவிர்த்து தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வது உயிர் பாதுகாப்புக்கு உத்தரவாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஊரடங்கு முடக்கத்தால் நாளொன்றுக்கு 15 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுவதாக அரசாங்கம் கூறுகிறது. நாடு வருவாயை இழந்த நிலையிலும் மேலதிக செலவுகளால்

மிகுதி 2ஆம் பக்கம்

# கற்பனாவாதமாக முடிந்திருக்கும் மங்களவின் கொள்கைகள்



*“மங்கள நீங்கள் இன்னும் இறக்கவில்லை. இலங்கை மற்றும் உலகம் குறித்த உங்கள் விதிவிலக்கான பார்வை இன்னும் வாழ்கிறது. நாங்கள் நடத்திய போராட்டங்கள் என்றும் உயிர்ப்புடன் இருக்கும்”*

கொரோணாவின் கோரப்பிடியில் சிக்கி முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கடந்த 24 ஆம் திகதி காலமானார். அவரோடு மிகவும் நெருங்கிய அரசியல் நட்பை கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்துள்ள மிகவும் உருக்கமான அனுதாபச் செய்தி இது.

மங்கள சமரவீரவின் இளமை துடிப்பையும் ஆளுமையையும் அறிந்த சந்திரிகா அம்மையார், தான் ஜனாதிபதியாக இருந்த போது அவரை அமைச்சரவை ஆசனத்தில் அமர்த்தி அவரது மக்கள் பணியை அழகு பார்த்தவர்.

சந்திரிக்காவின் ஆட்சியில் அமைச்சராக இருந்து பல புரட்சிகர மாற்றங்களை கொண்டு வந்தவர் மங்கள. இவரது செயல்பாட்டின் மூலம் அம்மையாரின் ஆட்சிக்கும் பெருமை சேர்த்தது.

பன்முகத்தன்மையை இலங்கையில் வாழவைக்கும் மங்களவின் கொள்கையோடு மிகவும் நெருங்கி செயல்பட்டவர் சந்திரிகா குமாரதுங்க அம்மையார். மிகவும் நொந்து போன நிலையில் அவர் வெளியிட்டிருக்கும் அனுதாபச் செய்தி, கொள்கைகளை அமல்படுத்த முடியாத தோல்வியை ஒப்புக் கொள்கிறது.

**பல்லினத் தன்மையை உரத்துச் சொன்ன ஆளுமைக் குரல்**

நீண்ட காலம் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த மங்கள சமரவீர, இப்போது எம்பியாகக் கூட இல்லாத நிலையில், சர்வதேச மட்டத்திலும் உள்ளூரிலும் இரங்கல் செய்திகள் குவிந்த வண்ணம் இருப்பதைப் பார்த்தால் மங்களவின் ஆளுமையும் திறமையும் இப்போது புரிகிறது போலிருக்கிறது.

இடதுசாரி பாரம்பரியத்திலிருந்து அரசியலில் தடம் பதித்த மங்கள, தன் ஆளுமையை சர்வதேசத்திற்கு எடுத்துச் சென்றவர். அரசியலில் பிரவேசிப்பவர்களெல்லாம்

ஏதோ ஒன்றை சாதிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். நாட்டையும் மக்களையும் வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் நல்ல சிந்தனைகளோடுதான் எல்லோரும் கால் பதிக்கிறார்கள் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால், அரசியல் களநிலவரங்களும் காய்நகர்த்தல்களும் அவர்களை திசை மாற்றி விடுகின்றன.

இலங்கையில் காலங் காலமாக பின்பற்றப்படும் அரசியல் போட்டா போட்டிகளும் இனவாத செயல்பாடுகளும் சிறுபான்மை இனங்களை இலக்கு வைத்த அரசியல் கலாசாரமும் தூய்மையான சிந்தனாவாதிகளையும் திசை திருப்பி விடுகின்றன. பாராளுமன்ற ஆசனங்களை தக்க வைப்பதற்காக ஒவ்வொருவரும் எடுக்கும் எத்தனங்களும் அரசியல் சகதிக்குள் அவர்களை ஈர்த்துச் செல்கின்றன.

வெள்ளைக்காரன் நம்மிடம் விட்டுச் சென்ற மிகப்பெரிய சொத்து பிரித்தாளும் தந்திரம்.

(*Divide and rule*) இதுதான் இலங்கை அரசியலிலும் நிர்வாக கட்டமைப்புகளிலும் இன்றும் நீடித்து நிலைக்கிறது. நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தி நவீனத்துவத்தில் பிரவேசிக்க முயலும் புதிய அரசியல் சிந்தனையாளர்கள் கூட காலப்போக்கில் தங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.அல்லது உருமாறும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இத்தகைய அரசியல் நிலையில் இருந்து முற்றிலும் மாறுபட்டவர் மங்கள சமரவீர.

‘வத்திக்’ ஆடை வடிவமைப்பு கலையில் நிபுணத்துவம் பெற்றவர் மங்கள. தனது விருப்பத்துக்கு ஏற்ப வெளிநாடு சென்று கல்வி கற்ற இவர், நாடு திரும்பியதும் எதனையும் கலை ஆர்வத்துடன் சிந்திக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். நவீனத்துவ சிந்தனை என்பது இவரது உதிரத்தோடு கலந்தவை.

அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்த போதெல்லாம் தனது அலுவலகங்களை அழகுபடுத்த அவர் பல இலட்சம் ரூபாய்களை செலவு செய்தார். இது அரசாங்க வட்டாரத்திலும் ஊடகங்களிலும் விமர்சனங்களுக்குள்ளாகின. வீண் விரையம் என்பதற்காக தனது அழகு உணர்வையோ செலவுகளையோ அவர் மாற்றிக்கொள்ளவில்லை.

தகவல் தொழில் நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி பூகோளமயமாக்கலுக்கு வித்திட்டது. இரண்டு விரல் நுனிகளுக்கிடையில் இன்று உலகம் இயங்குகிறது. என்றாலும் தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டிலும் வளர்ச்சியிலும் நாம் சுமார் 25 ஆண்டுகள் பின்னால் நிற்கிறோமென ஆய்வுகள் கூறுகின்றன. இதனைக் கருத்தில் கொண்ட மங்கள சமரவீர, இலங்கையின் தொலைத் தொடர்பு தொழில் நுட்பங்களில் புரட்சிகரமான மாற்றங்களை செய்தார்.

1994ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான அரசின் தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக பொறுப்பேற்ற அவர், அதிரடி மாற்றங்களை செய்ததால் தான் சமூக வலைத்தளங்களுக்குள் இலங்கையும் தடம் பதித்தது.

பூகோள வளர்ச்சிக்குள் இலங்கையையும் நகர்த்தும் இவரது திட்டங்களுக்குள் தொழிற் சங்கங்களால் பாரிய எதிர்ப்புகள் வந்தபோதும், சவால்களை எதிர்கொண்டு துணிகரமாக அதனை நிறைவேற்றினார்.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் நகர அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்த மங்கள, கொழும்பு உட்பட நகரங்களை நவீனமயப்படுத்த ஓர்மையுடன் செயல்பட்டார். கொழும்பு காலிமுகத் திடலும் காலி வீதியும் புனரமைக்கப்பட்டு அழகுபடுத்தியதோடு,வீதியின் இரு மருங்கிலும் பச்சைப் பசேலென்ற மரங்கள் நட்டு இயற்கைக்கும் எழில் ஏற்றுறினார்.

கொழும்பு வீதிகளை அழகுபடுத்துவதில் தனித்து களமிறங்கி செயல்பட்டபோது, கடும் விமர்சனங்களுக்கு உள்ளானார். அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. அமைச்சரவையில் இருந்த ஒரு சில அமைச்சர்கள் கூட அவருக்கு எதிராகச் செயல்பட்டனர். சட்டவிரோத கட்டிடங்களை அகற்றி, கொழும்பு வீதிகளை விஸ்தரித்து அழகேற்றும் கட்டும்பணியில் நேரடியாக ஈடுபட்ட அவர், கொழும்பு புஞ்சி பொருளை சந்தியிலிருந்த சிறிய பௌத்த விகாரை ஒன்றையும் அப்புறப்படுத்தினார்.

சிங்கள மக்கள் இதற்கு எதிராக கொதித்தெழுந்தனர்.பௌத்த மதத்தினரும் சிங்களக் கடும்போக்காளர்களும் வீதியில் இறங்கி மங்களவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன் அவரது கொடும்பாவியையும் எரித்தனர். இதனை கண்டு கிஞ்சித்தும் அசையாத மங்கள, “நாட்டின் அபிவிருத்தியில் மதங்கள் தலையிடக்கூடாது” என்று கூறினார். இருந்தாலும், ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள், அந்த விகாரையை மீண்டும் அந்த இடத்திலேயே பிரதிஷ்டை செய்தனர். என்றாலும், பௌத்த தேரர்களின் தலையீடுகளுக்கு மங்கள சமரவீர தனித்து நின்றே பதில் கொடுத்தார். இந்த இடத்தில் அவர் தன்னுடைய அரசியல் எதிர்காலத்தை சிந்திக்கவில்லை. தன்னுடைய தேசப்பற்றுள்ள கொள்கைக்காக எதிர்நீச்சல் போடும் வல்லமையுடன் செயல்பட்ட துணிகர அரசியல்வாதியாக மங்கள திகழ்ந்தார்.

**“மங்களவின் போராட்டங்களும் கொள்கையும் அரசியலில் வாழும்”**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மங்கள சமரவீர என்பவர் ஒரு தவிர்க்க முடியாத பேராளுமை. சிங்கள கடும்போக்காளர்கள் மத்தியில் செல்லாக் காசாகக்கப்பட்டபோதும், எதையுமே பொருட்படுத்தாமல் அவருடைய பயணத்தில் தனித்து வீறுநடை போட்டவர். சிங்களக் கடும் போக்காளர்களால் ‘தேசத்துரோகி’ என விமர்சிக்கப்பட்ட போதும், யார் துரோகி என்பதை காலந்தான் பதில் சொல்லும் என வார்த்தைகளால் வாதிட்ட அரசியல்வாதியை மங்கள.

சமாதானமும் தேசிய நல்லிணக்கமும் இல்லாமல் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்ற தனது கொள்கையை மங்கள தனது இறுதி மூச்சுவரை கொண்டிருந்தார். புரையோடிப் போய் கிடக்கின்ற

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...



# பனங்காடு வைத்தியசாலை ஸ்தம்பித்ததேன்?

-வி.சுகிர்தகுமார் -

## கொதித்தெழுந்த மருத்துவர்கள் பாதுகாப்பு உத்தரவாதத்தால் மீண்டும் திறப்பு.

'சுமார் 75 வருடங்களுக்கு முன்னர் நடமாடும் வைத்தியசாலையாக ஆரம்பிக்கப்பட்டு 15 கிராமங்களை உள்ளடக்கி '20ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தக்கூடியதாக அமைந்துள்ள அம்பாரை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பனங்காடு பிரதேச வைத்தியசாலை தொடர்பிலான செய்திகள் கடந்த சில நாட்களாக ஊடகங்கள் வாயிலாக அதிகமாக பேசப்பட்டு வருவதுடன் மக்கள் கவனத்தையும் வெகுவாக ஈர்த்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. வைத்தியசாலை வரலாற்றில் வைத்தியர் ஒருவர் உள்ளிட்ட ஊழியர்கள் தாக்கப்பட்டமையினால் 4 நாட்களாக வைத்திய சேவைகள் இடம்பெறாமல் இழுத்து மூடப்பட்டமையே இதற்கு காரணமாக அமைந்தது. இதற்குரிய அடிப்படை காரணம் என்ன? வைத்தியசாலையில் நடந்தது என்ன? இதன் பின்னராக அங்கு நடைபெற்றது என்ன? இறுதியாக எட்டப்பட்ட தீர்மானம் என்ன? இதனை சற்று ஆராய்ந்து பார்ப்போம். அதற்கு முன்னர் குறித்த வைத்தியசாலையின் வரலாற்றையும் சற்று நோக்குவோம்.இந்த வைத்தியசாலை வரலாற்றில் பனங்காட்டு ஐயா என அழைக்கப்பட்ட வைத்தியர் ரி.தயானந்தராஜா அவர்கள் மறக்கமுடியாத மனிதர். சுமார் 75 வருடங்களுக்கு முன்னர் நடமாடும் வைத்தியசாலையாக ஆரம்பிக்கப்பட்ட வைத்திய சேவைகள் 2006ஆம் ஆண்டு 14ஊழியர்களுடன் செயற்படவும் பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்படுவதாகவும் அப்போதய அமைச்சர் எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாவின் காலத்தில் உறுதிமொழி வழங்கப்பட்டது. இதேவேளை அமைச்சரினால் மகப்பேற்று வைத்தியசாலை திறப்பு விழா செய்யப்பட்டதுடன் அம்புலன்ஸ் வண்டியும் வழங்கி வைக்கப்பட்டது. இருப்பினும் தரமுயர்த்தப்பட்டதாக பெயர்ப்பலகை மாத்திரமே நடப்பட்டதுடன் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் 2013ஆம் ஆண்டில் இங்கு கடமையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 10ஆக குறைக்கப்பட்டதுடன் அம்புலன்ஸ் வண்டிக்காக நியமிக்கப்பட்ட சாரதியும் பிறிதொரு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். மேலும் மகப்பேற்று பிரிவும் முறையாக இயங்காமல் மூடப்பட்டது. இந்நிலையில் இரவு நேர வைத்திய சேவைகளும் நிறுத்தப்பட்டது. இது தொடர்பில் அப்போதய வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளர் மறைந்த ஆர்.இராமநாதன் உள்ளிட்ட பலர் பலரிடம் முறைப்பாடு செய்தனர். அலிக்கம்பை தொடக்கம் கோளாவில் வரைக்குமான பத்துக் கிராமங்களுக்கு மேற்பட்ட மக்கள் பயன் பெற்றுவந்த இந்த வைத்தியசாலை ஏன் தற்போது இவ்வளவு பிரச்சினைகளை எதிர்கொள்கிறது?

இந்நிலையில் வைத்தியசாலையின் 2015 ஆம் ஆண்டு மீண்டும் பணியாளர்களின் தொகை 4ஆக குறைக்கப்பட்டதாக திறைசேரியின் முகாமைத்துவ சேவை பணிப்பாளரினால் கடிதம் அனுப்பப்பட்டது. இதனால் 'பிரதேச வைத்தியசாலை' என பெயர் பொறிக்கப்பட்ட இந்த வைத்தியசாலை 'ஆரம்ப வைத்திய பராமரிப்பு பிரிவாக' இயங்குகின்ற சூழ்நிலை ஏன் ஏற்பட்டது?

'எங்களது பதிவின் பிரகாரம் ஆரம்ப வைத்திய பராமரிப்பு பிரிவு வைத்தியசாலையாகவே இதன் தரம் உள்ளது. அதே நேரம், ஆரம்ப வைத்திய பராமரிப்பு பிரிவிற்கும் அம்புலன்ஸ் வண்டி வழங்கப்படவேண்டும் எனும் திட்ட அறிக்கையையும் பணியாளர்கள் அதிகரிக்கப்படவேண்டும் எனும் கோரிக்கையினையும் சமர்ப்பித்துள்ளோம் அனுமதி கிடைத்தால் அவற்றை வழங்குவோம் என்றார் அப்போதய கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஏ.எல்.அலாவுதீன்.

இதற்கிடையே, வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பில் அம்பாரை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கு.புஸ்பகுமார், முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உள்ளிட்டவர்களும் அவ்வப்போது நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதேநேரம், குறித்த வைத்தியசாலைக்கு விஜயம் செய்த தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் வைத்தியசாலையின் தரமுயர்வு உள்ளிட்ட பல விடயங்கள் இந்த அரசாங்கத்தில் விரைவில் தீர்த்து



**சுகாதாரப் பணிப்பாளர் சுகுணன் தலைமையில் நடந்த மாநாட்டில்இணக்கப்பாடுகளுடன் சுமுக தீர்வு**

வைக்கப்படும் என உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் தற்போதய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றும் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் வருகை மற்று சுகபிபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன் பிரதம அதிதியாக கலந்து அடிக்கல்லை நாட்டி வைத்தனர். இதேநேரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறித்த வைத்தியசாலையின் சகலவிதமான அபிவிருத்திகளுக்குமாக 5கோடி ரூபா உலக வங்கியினால் ஒதுக்கீடு செய்து பரிந்துரைக்கப்பட்ட நிலையில் முதற்கட்டமாக 37 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அப்போது கூறினார். இதன் பிரகாரம் வைத்தியசாலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்றதுடன் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய வாய் சுகாதார பிரிவும் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில் வைத்தியசாலையின் தற்போதய பொறுப்பு அதிகாரி யு.எல்.எம்.சஹீல் வைத்தியசாலயினை பொறுப்பேற்று மக்கள் சேவையினை சிறப்பாக மேற்கொண்டு வந்தார். இதனால், அனைத்து மக்களின் பாராட்டையும் பெற்றுக்கொண்டார். இந்த நிலையிலேயே குறித்த துரதிஸ்ட சம்பவம் நடைபெற்றது. கடந்த 17ஆம் திகதி அலிக்கம்பை கிராமத்தில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவம் ஒன்றில், காயமடைந்த கணவன் மனைவி இருவரும் பனங்காடு வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வந்துள்ளனர். இந்நிலையில், உடனடி சிகிச்சை அளித்த வைத்தியர், காயங்களுக்குள் சன்னங்கள் உள்ளதால் மேலதிக சிகிச்சைக்காக காயமடைந்தவரை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாற்ற வேண்டும் என கேட்டுள்ளார். அத்தோடு, மாற்றம் செய்வதற்கான விண்ணப்ப படிவத்தையும் பூரணப்படுத்த தயாராகியுள்ளார். ஆயினும், காயமடைந்தவர்களை அழைத்து வந்த இன்னுமொருவர் அவர்களை மாற்ற கூடாது என்றும் உம்மால் சிகிச்சை அளிக்க முடியாதா? என்றும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் வைத்தியரையும் கடமையிலிருந்த தாதி உள்ளிட்ட சிலரையும் தாக்கியுள்ளார். இதன்போது, அங்கிருந்த அம்புலன்ஸ் சாரதி உள்ளிட்டவர்களால் வைத்தியர் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் பொலிசாருக்கு தகவலை வழங்கி உள்ளனர். ஆனாலும், குறித்த நபர் காயமடைந்தவர்களையும் ஆட்டோவில் ஏற்றி அங்கிருந்து தப்பி சென்றுள்ளார். இந்நிலையில், அங்கு விரைந்த பொலிசார் சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்டதுடன் காயமடைந்தவர்களை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதித்ததன் பின்னர் குறித்த நபரையும் கைது செய்தனர். வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் ஊழியர்களும் மேற்கொண்ட உரிய நடவடிக்கை காரணமாக குறித்த நபர் அன்றைய தினமே பொலிசாரால் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். ஆனாலும், குறித்த நபரின் விடுதலை தொடர்பில் அதிருப்தி அடைந்த வைத்தியர் உள்ளிட்ட ஊழியர்கள் வைத்தியசாலையில் தமக்கு உரிய பாதுகாப்பு இல்லை என தெரிவித்து வைத்தியசாலைக்கு சமூகமளிக்காத நிலையில் வைத்தியசாலையும் மூடப்பட்டது. இதனால், சிகிச்சைக்காக அங்கு கைக்குழந்தைகளுடனும் நோயுடனும் தூரப்பிரதேசங்களில் இருந்து சென்ற பலர் ஏமாற்றதுடன் வீடு திரும்பினர்.

ஆயினும், இத்தாக்குதல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இல்லாமை காரணமாகவே நடைபெற்றுள்ளதாகவும் வைத்தியசாலைக்கு தேவையான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமித்து தருமாறும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவினரும் பொதுமக்களும் உயர் அதிகாரிகளை கேட்டுக்கொண்டனர். மேலும் சம்மந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர். ஆயினும், வைத்திய சேவைகள் வழங்கப்படாமல் மூடப்பட்டிருந்த வைத்தியசாலையின் சேவைகள் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் நடவடிக்கை காரணமாக

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...



# உழைப்பதில் கொஞ்சம் கொடுக்கிறோம்

## கொடுப்பதில் திருப்தி காணும் பரோபகாரி சுவீஸ் விஜயகுமாரன்

**புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் நாட்டையும் பிறந்த ஊரையும் மக்களையும் நேசிக்கும் சில உறவுகள்தான் இன்று பல குடும்பங்களுக்கு பக்கபலமாக உள்ளனர். இவ்வாறு எத்தனையோ ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும், பிள்ளைகளின் கல்வியையும் உயர்த்துவதற்கு உதவிக்கரம் நீட்டும்,புலம் பெயர்ந்து வாழும் நல்லுள்ளங்களுக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.**

**புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் குளிரிலும், வெயிலிலும் இயந்திரம் போன்று தொழில் செய்து உழைக்கும் பணத்தில், ஒரு பகுதியை இவ்வாறு ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்கு என்று ஒரு மனம் வேண்டும்.இவ்வாறு இன்று பல உதவிகளை தானும் தனது குடும்பமுமாக இலங்கையின் பல இடங்களிலும் செய்து வரும், கல்முனை பாண்டிருப்பை சேர்ந்த சுவிஸ் நாட்டில் வசித்து வரும்இராசலிங்கம் விஜயகுமாரன், இலங்கையின் பல பாகங்களிலும் தனது குடும்பத்தின் தனிப்பட்ட நிதிப்பங்களிப்பில் ஆறு வீடுகளையும் தனது சுயமான நிதிப்பங்களிப்புடன் நான்கு வீடுகளையும் அமைத்து கொடுத்துள்ளார்.**

**தற்போதும் வீடு கட்டுமான பணிகள் இடம்பெறுகின்றது. இவ்வாறு பிறருக்கு உதவி செய்து திருப்தி கொள்ளும் இராசலிங்கம் விஜயகுமாரன், பல அமைப்புக்களில் அங்கம் வகிக்கின்றார். பாண்டிருப்பு ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் அரசடி விநாயகர் கோவில் இந்து இளைஞர் மன்ற ஆலோசகராவும் கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினராகவும் கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் சிரேஷ்ட உறுப்பினராகவும் சமத்துவ மக்கள நல ஒன்றியத்தின் ஐரோப்பிய நாட்டு இணைப்பாளராகவும் மாணவர் மீட்பு பேரவையின் இணைப்பாளராகவும் கருணை உள்ளம் அமைப்பின் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறார். குறுகிய கால விஜயமொன்றை மேற்கொண்டுதற்போது கல்முனை வந்திருக்கும் அவரைஇகல்முனை நெட் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினோம்.**

**தங்களை பற்றி ஓர் அறிமுகம் வேண்டும் ?**

எனது சொந்த இடம் கல்முனை பாண்டிருப்பு. சுவிஸ்லாந்தில் கடந்த முப்பது வருடங்களாக குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றேன். எனது தந்தை இராசலிங்கம், தாய் சாந்தம்மா, எனது மனைவி குபேரலெட்சுமி (விஜி) எங்களுக்கு மூன்று பிள்ளைகள்.இரண்டு மகள்கள் விதுர்சிகா, தர்ஷிகா ஒரு மகன் இருக்கிறார் கஜானந்த் என்பது அவருடைய பெயர். 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுவிஸ் நாட்டுக்கு புலம் பெயர்ந்தோம்.

**புலம் பெயர்ந்து வாழும் தாங்கள் இன்று பலராலும் பேசப்படும் அளவுக்கு இனம்,மதம்,பிரதேசங்களை தாண்டி பல உதவிகளை செய்து வருகின்றீர்கள். இது எப்படி உங்களால் சாத்தியப்படுகிறது?**

இன்று நாங்கள் உழைப்பதில் முடிந்தளவு எமது மக்களுக்கு உதவி செய்யகூடிதாக உள்ளமைக்கு முதலில் ஆண்டவனுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன். வாழ்க்கையில் பலவாறான துன்பங்களையும் கஷ்டங்களையும் எல்லோரும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அனுபவித்து இருப்போம். ஏழ்மை கஷ்டம் என்றால் என்ன என்று நானும் அறிந்தவன். உழைக்கும் பணத்தில் எங்கள் குடும்ப செலவுகள் போக மாதாந்தம் முடிந்த உதவிகளை செய்து வருகின்றோம். இவ்வாறு உதவிகளை செய்வதற்கு எனது மனைவியும் பூரண ஒத்துழைப்பு என்று கூறுவதைவிட மனைவியின் பங்களிப்பும் அதிகமே . ஒரு குடும்பத்துக்கு முடிந்தளவு ஒரு உதவியை செய்துள்ளோம் என்பதில் நானும் எனது மனைவியும் திருப்தியடைவோம். அது எங்களுக்கு மகிழ்ச்சியை தருகின்றது. எங்களைப் போலவே எங்களது பிள்ளைகளும் பிறருக்கு உதவி செய்வதென்றால் அவர்களுக்கும் அதே ஆனந்தம்.



**மனைவியின் கூடுதல் பங்களிப்புடன் வறியோருக்கு வீடுகளை வழங்குகிறோம்**

**இதுவரை எவ்வாறானஉதவிகளை செய்துள்ளீர்கள் ?**

சுவாமி தந்திரதேவா காலத்தில் திலகவதியார் இல்லத்தின் ஊடாக மாணவர்களின் கல்விக்கு உதவிகளை செய்து வந்துள்ளோம். சுனாமி பேரவலத்தின்போது,சுவிஸ் மற்றும் பிரான்ஸ் நாட்டில் உள்ளவர்களை ஒருங்கிணைத்து உதவிகளை செய்து வந்தோம்.பின்னர் உதயம் எனும் அமைப்பை உருவாக்கி, வாழ்வாதாரம் கல்வி, மருத்துவ உதவிகளை எமது மக்களுக்காக செய்து வந்தோம். அவ்வாறே, நாங்கள் வாழும் சுவிஸில் ஊஸ்டர் தமிழ் சங்கத்தை உருவாக்கி அதனூடாகவும் பணிகளை செய்தோம்.

பாண்டிருப்பில் அறிவோதயம் எனும் அமைப்பையும் உருவாக்கினோம். இவ்வாறு அமைப்புக்களை உருவாக்கி உதவி செய்பவர்களை ஒருங்கிணைத்து, மக்களுக்கு நேரடியாக உதவிகளை செய்து வந்தோம். எனது குடும்பம் சார்பாகவும் தனிப்பட்ட ரீதியிலும் நாட்டில் உள்ள அமைப்புக்களுக்கூடாகவும் உதவிகளை செய்து வருகின்றோம். முல்லைத்தீவில் ஒரு வீடு, வவுனியாவில் ஒரு வீடு, பாண்டிருப்பில் இரண்டு வீடுகள், கிரான் பிரதேசத்தில் எனது மகனின் பிறந்த தினத்தில் ஒரு வீடு, எனது மனைவியின் தகப்பானார் கல்வி கற்பித்த இடமான பொத்துவில் பிரதேசத்தில் அவர் நினைவாக ஒரு வீடு என ஆறு வீடுகளை எங்கள் குடும்பத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் செய்துள்ளோம். முனைக்காடு கிராமத்தில் ஒரு வீடும் வளத்தாப்பிட்டியில் ஒரு வீடும் அக்கரைப்பற்றில் ஒரு வீடும் இறக்காமம் முஸ்லிம் பிரிவில் ஒரு வீடும் என இங்கு நான்கு வீடுகளை எங்களது குடும்பத்தின் பகுதி நிதிப்பங்களிப்புடன் உதவி செய்ய முன்வந்தவர்களை ஒருங்கிணைத்து அமைக்கின்றோம். இந்த பணிக்கு இலங்கையில் களத்தில் நின்று இந்த வீடுகளை அமைத்து பயனாளிகளுக்கு வழங்குதல், பொருத்தமான குடும்பங்களை தெரிவு செய்தல் போன்ற விடயங்களை சிறப்பாக செய்யும் கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனை மற்றும் சமத்து மக்கள் நல ஒன்றியம் போன்றவற்றுக்கும் பல்வேறு வாழ்வாதார உதவித் திட்டங்களை செய்வதற்கு களத்தில் நின்று அவற்றை பயனாளிகளுக்கு வழங்க ஒத்துழைப்பு வழங்கிய கருணை உள்ளம் அமைப்பு போன்றவற்றுக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.





# மட்டு.மாவட்டத்தில் பரிதவிக்கும் விவசாயிகள்



–வ.சக்திவேல்–

“எமது வேளாண்மைச் செய்கை இம்முறை அறக்கொட்டித் தாக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள். காட்டு யானைத் தாக்கத்திலிருந்தும் அறக்கொட்டியிலிருந்தும் பொத்திப் பொத்தி பாதுகாத்து செய்தெடுத்த வேளாண்மையை அறுவடை செய்து விற்பனை செய்ய முயன்றால், ஒரு மூடை நெல்லை 2800 ரூபாவிற்கு கேட்கின்றார்கள். அதிக விலை கொடுத்து எண்ணெய், பசளை வாங்கி செய்துள்ள போதிலும், இந்த விலைக்கு விற்றால் அடியோடு பெரும் நட்டத்தைத்தான் நாம் எதிர்கொள்ளோம். குறைந்தது ஒரு மூடை நெல் 4000 ரூபாவுக்கேனும் விற்றால்தான் எமக்கும் ஒரளவேனும் இலாபம் கிடைக்கும். தற்போதைக்கு ஒரு போத்தல் கிருமிநாசினி 4000 ரூபா விற்கின்றார்கள். இந்த நிலையில் 2800 இற்கு நெல் விற்றால் எமது நிலமை என்னவாகும்.

காட்டு யானைகளின் தொல்லைகளை எம்மால் சகித்துக் கொள்ள முடியாமலுள்ளது. வேளாண்மை விதைத்ததிலிருந்து அறுவடை செய்யும் காலம் வரைக்கும் எமது பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்தவண்ணமேதான் உள்ளன. வன ஜீவராசிகள் அதிகாரிகளுக்குச் சொன்னால் அவர்களும் இதனை கவனிக்கின்றார்கள் இல்லை. காட்டு யானைகளைக் கட்டுப்படுத்தி நெல்லின் உத்தரவாத விலையை உயர்த்தித் தருமாறு நாம் அரசாங்கத்திடம் கேட்கின்றோம் எனத் தெரிவிக்கின்றார் மண்டூர், வட்டவளை வயற் கண்டத்தின் வட்டவிதானை ஆறுமுகம் இராமச்சந்திரன்.

ஒரு மூடை நெல் 2000, 2500 ரூபாவுக்கு விற்பனை செய்தால் எமக்கு செலவு செய்த முதல் காசும் வராது. ஒருபுறம் அறக்கொட்டித்தாக்கம், ஏற்பட்டு வேளாண்மை எல்லாம் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்து விட்டன. குறைந்தது 4000 ரூபாவிற்கேனும் ஒரு மூடை நெல் விற்பனை செய்தால்தான் எமக்கு ஓரளவு இலாபம் கிடைக்கும். இல்லாவிட்டால் இனிமேல் நாம் இந்த தொழிலை செய்து ஒரு பலனுமில்லாமல்தான் போகும். பாடுபட்டு செய்தால் அதில் பலன் கிடைக்க வேண்டும்,ஆனால், அது எமக்கு கிடைப்பதில் பல சவால்கள் உள்ளன. எனவே, நெல்லுக்கு அரசாங்கம் நியாய விலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என தெரிவிக்கின்றார் மற்றுமொரு விவசாயியான த.ராஜூ அரசாங்கம் விவசாயிகளிடத்தில் கரிசனை கொள்ள வேண்டும், விவசாயிகள் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலும் வேளாண்மைச் செய்தாலும், 4000 ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண்டிய ஒரு மூடை நெல்லை, 2,300 ரூபா தொடக்கம் 2500 ரூபாவுக்குத்தான் கொள்வனவு செய்கின்றார்கள். இதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். விவசாயிகள்தான் சமூகத்தின் உண்மையாக தோழனாவான். விவசாயிகளிடம்தான் உணவு உள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் உணவைத்தான் அனைவரும் உண்ண வேண்டியுள்ளது. எனவே, விவசாயிகளின் பிரதான உற்பத்தியான நெல்லிற்கு நியாயமான விலையை அரசாங்கம் தீர்மானிக்க திடசங்கற்பம் பூண வேண்டும் என தெரிவிக்கின்றார் மட்டக்களப்பு படுவாங்கரைப் பகுதி, மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி விக்னராஜா.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தத்தமது மன ஆதங்கத்தைத் தெரிவிக்கின்ற நிலமையை உற்று நோக்கிப் பார்த்தால், மாவட்டத்திலுள்ள விவசாயிகள் காலத்திற்குக் காலம் மேற்கொண்டு வரும் பிரதான வாழ்வாதாரம் நெற் செய்கையாகும். இதற்கு உத்தரவாத விலை இல்லாதது பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதே விவசாயிகளின் ஆதங்கம் ஆகும்.

நாங்கள் சேற்றிலே கால் வைத்தால்தான், நீங்கள் சோற்றிலே கை வைக்க முடியும் என்பது விவசாயிகளின் தொன்றுதொட்டு வரும் கிராமத்துப் பழமொழியாகும். எனவே உணவை உற்பத்தி செய்யும் விவசாயி இரவு பகல் பாராது, மழை,வெள்ளம், பனி என்று பாராது, தாம் காலத்திற்குக் காலம் செய்கை பண்ணும் தொழிலை கண்ணை இமை காப்பதுபோல் தனது உடலுக்கு எதுவித நோய்வந்தாலும், அதனைக் கருத்திற் கொள்ளாது, தாம் செய்யும் பயிருக்கு எதுவித பங்கமும் ஏற்படாதவாறு பேணிப் பாதுகாத்துதான் தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இப்போது, 50 கிலோ கொண்ட ஒரு மூடை




**வெள்ளம், வரட்சி, காட்டு யானைகளின் அட்டகாசங்களால் பாதிக்கப்படும், மட்டு விவசாயிகளை அறக்கொட்டியானும் விட்டுவைக்கவில்லை.**

உரம் சுமார் 5000 ரூபாவிற்கும், கிருமிநாசின் ஒரு போத்தல் 4000 ரூபாவிற்கும் கொள்வனவு செய்கின்ற போதிலும், தமது விளைபொருளான நெல்லிற்கு மாத்திரம் ரூ.2300 தொடக்கம் ரூ.2500 வரை கொள்வனவு செய்வது எந்தளவிற்கு நியாயமானது என அப்பகுதி விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். காடு வெட்டி வேர் பிடுங்கி கழனி செய்து என்பது ஆன்றோர் வாக்கு. ஆதி காலத்திலிருந்து மனிதர்கள் விவசாயத்தையே நம்பி அவர்களது வாழ்வைக் கொண்டு நடாத்தி வந்துள்ளார்கள். அதிலும் குறிப்பாக வேளாண்மை செய்கைதான் முக்கிய பங்கு வகிக்கிறது. இலங்கை ஒரு விவசாய நாடாகும். இந்நிலையில், கடந்த காலங்களிலிருந்து அரசாங்கமும், விவசாயத்துறைக்கு முன்னுரிமை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடையமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி, மண்டூர், பழுகாமம், கொக்கட்டிசோலை, மாவடிமுன்மாரி, மண்டபத்தடி, கரடியனாறு, களுவாஞ்சிகுடி, ஏறாவூர், வாகரை, செங்கலடி, போன்ற பல பகுதிகளை உள்ளடக்கியுள்ளதோடு அதிகமாக படுவான்கரைப் பகுதியிலே அமைந்துள்ள வயல் நிலங்களில்தான் வேளாண்மை கூடுதலாக செய்கை பண்ணப் படுகின்றன. ஆனாலும், கடந்த வருடங்களைப் போலல்லாமல், இவ்வருடம் வேளாண்மையைத் தாக்கும் அறக்கொட்டியின் தாக்கம் அதிகரித்ததனால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளதோடு, கடன்பட்டு, அதிக செலவு செய்து வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு வரும் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் பெரும் விரக்கதியிலுள்ளதனையும், அவதானிக்க முடிகின்றது.

கடந்த வருடங்களைப் போலல்லாமல் இவ்வருடம் அறக்கொட்டியின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால், எமது பகுதி விவசாயிகள் மிகுந்த கஷ்ட்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அறக்கொட்டியின் தாக்கத்தினால் விளைச்சல் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இவற்றினைவிட நெல்லுக்கான உத்தரவாத விலைகளும், குறைவடைந்துள்ளன. கிடைக்கும் நெல்லைக்கூட உரிய நியாயமான விலைக்கு விற்க முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

நெல்லிற்கு உத்தரவாத விலையைத் தீர்மானித்து விவசாயிகளிடமிருந்து நியாய விலையில் நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டும். இவ்வருடம் எமக்கு ஏற்பட்டுள்ள அறக்கொட்டியின் தாக்கமும், ஒரு அனர்த் தமாகவே நாம் கருதுகின்றோம். எனவே, இவற்றுக்கும் எமக்கு அரசாங்கம், நிவாரணம் வழங்க வேண்டும். இடைத்தரகர்கள், தம்மிடம் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதை நெல் சந்தைப்படுத்தும் சபை கட்டுப்படுத்த வேண்டும் என விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

விவசாயிகளிடமிருந்து இடைத்தரகர்கள் மிகக்குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதையும், நியாய விலைக்கு நெல் சந்தைப் படுத்தும் சபை கொள்வனவு செய்வதையும் அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

வெள்ளம், வரட்சி, மற்றும் காட்டு யானைகளின் அட்டகாசம், போன்ற பல அனர்த்தங்கைள எதிர்கொண்டு வரும் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் வாழ்வில் தற்போது அறக்கொட்டியின் தாக்கமும் விட்டுவைக்கவில்லை. எனவே, மட்டு மாவட்டத்தில் பாதிக்கப் பட்டுள்ள விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு, அரசின் நடைமுறைச் சாத்தியங்களுக்கு மேலாக, தீர்க்கமான செயற்பாடுகளையும் செயற்றிட்டங்களையும் சம்மந்தப்பட்டவர்கள் முன்மொழிய வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்பார்த்திருக்கின்றனர்.



# இசைமீட்டும் மண்ரூர் மைந்தன் டினேஸ்குமார்

கிழக்கிலங்கையின் மட்டு நகரின் வேலவன் குடி கொண்ட தில்லை மண்டூரில் பிறந்தது முதல் வசித்து வரும் திருச்சிற்றம்பலம் டினேஸ்குமார் இசை மற்றும் கலைத்துறையில் தனக்கென தனி இடம் பிடித்த இளம் கலைஞர். மண்டூர் மகா வித்தியாலயம் மற்றும் மண்டூர் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் தனது கல்வியை தொடர்ந்த இவர் அண்மையில் இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் கலை இளமாணி பட்டத்தை முடித்து தற்போது அரசதுறையில் பணியாற்றுகின்றார்.

சிறுபராயம் முதலே இசைத் துறையில் சாதிக்க வேண்டும் என்கின்ற வேகத்தோடு கல்வியோடு சேர்ந்தே மேடைகளில் பாடல்களைப் பாடுதல் மற்றும் பாடல்களுக்கு மெட்டுக்களை அமைத்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்து வந்ததன் விளைவாக இன்றுவரை கலைத்துறையில் ஒரு பாடகனாக, இளம் இசையமைப்பாளனாக மற்றும் அறிவிப்பாளனாக தன்னை தானே வளர்த்தெடுத்திருக்கிறார். பல்கலைக்கழக மட்டத்தில் இசை மற்றும் அறிவிப்புப் போட்டிகளில் வெற்றியீட்டியதன் விளைவாக கடந்த 2019ம் ஆண்டு இந்தியாவில் இடம்பெற்ற 12வது தெற்காசிய பல்கலைக்கழக கொண்டாட்டம் நிகழ்ச்சியில் இலங்கையின் பொப் இசைப்பாடல்களைப் பாடும் வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது.



சில இணைய வானெலிகளில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் மேடை அறிவிப்பாளராகவும் அறிவிப்புத் துறையில் சில சுவடுகளையும் பதித்து பயணித்துக் கொண்டிருக்கிறார். இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்து பாடியுமுள்ளார். அதில் ரசிகர்களின் வரவேற்பை பெற்ற பாடல்களாக **“கண்ஜாடக்காரி”, “இல்லறச்சிறையிலே”, “தேன் மொழியே”, “கண்திறவாய் கண்ணகியே” போன்றவற்றைக் குறிப்பிடலாம்.**

இலங்கையில் பொதுவாக கலைஞர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினைகளையும் தாண்டி சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுடன் இன்று வரை டினேஸ் திரு சந்தனா எனும் புனை பெயரில் கலைப்படைப்புக்ளுடன் பயணித்துக் கொண்டிருக்கும் இவர் ஹுவுளு ஊசநயவழைெ எனும் படைப்பகத்தினூடாக இளம் படைப்பாளர்கள் பலரை தன் படைப்புக்களில் வெளி உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார். மண்டூர் முருகன் உட்பட பல ஆலயங்களுக்கான பக்தி பாமாலை களையும் விளையாட்டு கழகங்களுக்கான கழக கீதங்களையும் இறுவெட்டுக்களாக வெளியீடு செய்துமுள்ளார். இவரது இசை சார்ந்த படைப்புக்களால் டினேஸ் திரு சந்தனா எனும் நாமம் நிலைத்து நிற்க எமது வாழ்த்துகள்.

இளம் கலைஞர் அறிமுகம்

கு.கிலசன்

# ஊடகத்துறையில் மிளிரும் சாய்ந்தமருது ஜெ.எம்.பாஸித்

அம்பாறை சாய்ந்தமருது கிராமத்தின் மீராசாஹிப் ஜெமீல் பாத்தும்மா தம்பதியர்களின் மூத்த புதல்வராக சாய்தமருது மண்ணில் பிறந்தவர் ஜெ.எம்.பாஸித். தனது ஆரம்ப கல்வியை சாய்ந்தமருது அல்-கமறூன் வித்தியாலத்திலும் உயர்தரத்தை கல்முனை ஸாஹிறா கல்லூரிலும் பயின்றார். பின்னர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டமுன் கற்கையை பூர்த்தி செய்துள்ளார். பாஸித் பாடசாலை காலத்திலிருந்தே டிஜிடல் மீடியாவிலும் அதீத ஆர்வம் கொண்டவர். பாடசாலைக் கல்வியின் பின்னர் தனது கவனத்தை முழுமையாக டிஜிட்டல் மீடியாவில் செலுத்தினார். அதனூடாக தேர்ச்சி பெற்ற பல நிறுவனங்களில் வடிவமைப்பாளராக பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றார்.

சுமார் 8 வருடங்கள் பணியாற்றிய அனுபம் கொண்டவர் தனது திறமையை வளர்த்து ஸ்கை கிராபிக்ஸ் எனும் ஒரு நாமத்தை உருவாக்கி அதனூடாக இணையதள வடிவமைப்புத் துறையில் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கினார். பின்னர் ஆலயடிவேம்பு சிவனருள் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒரு வருடம் கணினி வடிவமைப்பு பயிற்சி போதனாசிரியராகப் பணியாற்றினார்.

இதைவிட சமூக சேவகராகவும் தன்னை அடையாளப்படுத்திய இவர் சாய்ந்தமருது பிரேவு இளைஞர் கழகத்தின் தலைவரும் மற்றும் முன்னாள் இளைஞர் கழக சம்மேளனத்தின் உறுப்பினருமாவார். தேசிய ரீதியில் இடம்பெற்ற இளைஞர் மாநாடுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலத்தில் ஜனாதிபதி மக்கள் தொடர்பாடல் அதிகாரியாக சாய்ந்தமருது பிரதேசத்தில் நியமிக்கப்பட்டார்.

இவரது இளைஞர் ஆளுமை தலைமைத்துவம் மற்றும் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பிரித்தா
னிய நாட்டின் ‘எடின்பார்க்’ பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் சர்வதேச **‘வெண்கல’** விருது 2017யில் இவருக்கு வழங்கப்பட்டது.
வியூகம் முகநூல் ஊடகத்தில் பணிப்புரிந்தார். இதுவே இவரது ஊடகப் பயணத்திற்கு முதல் வித்திட்டது.

பின்னர் வேலை வாய்ப்பிற்காக 2019 ஆம் ஆண்டு கட்டார் நாட்டை நோக்கி பயணமானார். இவருக்கு ஊடகத் துறையில் ஏற்பட்ட ஆர்வம் கட்டார் நாட்டிலும் தனது ஊடகப் பயணத்தைத் தொடரத் தூண்டியது.
அதனால் பாஸித் தனது ஊடகத்தை 2020ம் ஆண்டில் கட்டார் நாட்டில் ஸ்கை தமிழ் எனும் பெயரில் உருவாக்கினார். இவ் ஸ்கைத் தமிழ் எனும் சமூகவலைதளமே தற்போது பிரபல்யமாக் காணப்படுகின்ற பெண் ஆளுமைகளை அடிப்படையாகக் கொண்ட துணிந்தெழு எனும் நேர்காணல் நிகழ்ச்சியையும், துணிந்தெழு சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறது. இத் துணிந்தெழு சஞ்சிகையின் மூலம் பல இளம் எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதோடு அவர்களுக்கு எழுத்தாளர் என்ற அடையாளத்தையும் இச் சமூகத்திற்கு வழங்குகிறது.

துணிந்தெழு சஞ்சிகை பிரசுரிக்க ஆரம்பித்து சிறிது காலத்திலேயே பிரபல்யம் அடைந்ததால்கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் தனது தூதுவராலயத்தில் பாஸித் மற்றும் சஞ்சிகை குழுவினரை அழைத்து பாராட்டுக்களை தெரிவித்தார். தனக்கென ஓர் அங்கீகாரத்தை உருவாக்கி வெற்றி நடை போடும்
இவரது இந்த ஊடகப் பயணம் தொடரவும்
சாதனைகள் பல படைக்கவும் எமது வாழ்த்துகள்.



தொடர் கதை

02

# உமா வரதராஜனின்

# ஜெனி



## சென்றவாரத் தொடர்ச்சி

கூடத்தில் சவுக்குமரம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தன்னுடைய அப்பாவை ஜெனி எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள். பிடரி மயிர் சிலும்பி நிற்கும் சிங்கம் போல அவள் அப்பாவின் தோற்றம் இருந்தது. மேசையில் கிடந்த எலும்புத் துண்டுகள் கூட அவருடைய சிங்கத் தோற்றத்திற்கு மெருகுசேர்த்தன. அவர் காலடியில் சாராயப் போத்தல் இருந்தது. கண்ணாடிக்குவளையில் மொய்க்கப்போன ஈக்களை அவர் அடிக்கடி விரட்டிக் கொண்டிருந்தார்.

‘ஸிற்’ என்றார் அவர். நான் உட்கார்ந்தேன்.

உடனே அவர் தன்னுடைய பழைய உலகத்திற்கு போய்விட்டார். சில பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களைப் பற்றி விசாரித்தார். அவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் எங்கள் நகரத்தின் பிரபலமான கால்பந்தாட்டக்காரர்கள் என்று எனக்குத் தெரியும். கால்பந்தாட்டம் எங்களூரில் பிரசித்தி பெற்ற விளையாட்டு. ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் எங்கள் பள்ளிக்கூட மைதானத்தில் கால்பந்தாட்டக்காரர்களும், ரசிகர்களும் கூடிவிடுவார்கள் வெள்ளைத் தொடைகள் விரட்டிச் செல்லும் உதைபந்தையும், ரசிகர்களின் விசில் சத்தங்களையும், ஆரவாரங்களையும் பள்ளிக்கூடம் கலைந்து போகும் போது நான் சந்தித்திருக்கின்றேன்.

நான் கால்பந்தாட்டம் பார்க்க சில நண்பர்களின் வற்புறுத்தலினாலேயே சென்றிருக்கின்றேன். மைதானத்திற்குப் போனதும் உட்கார்ந்துவிடுவேன். பின்னர் புற்களைப் பிடுங்கிக் கொண்டேயிருப்பேன். மைதானத்தின் புல், பூண்டுகளைப் பற்றி ஜெனியின் அப்பா விசாரித்திருந்தால் பட்டென்று பதில் சொல்லியிருப்பேன். ஜெனியின் அப்பா சிங்கம் போலிருந்தாலும் அவர் விசாரிப்பவர்கள் காற்றுப்போன பந்துகளைப் போல் சுருங்கிப் போய் விட்டார்கள். ‘கிளப்பில்’ பின்னேரங்களில் கூடி தண்ணியடித்து, பழம்பெருமை பேசி அவர்கள் கலைந்து செல்வதுண்டு. ஒருவேளை அவர்களுடைய பேரன்கள் இப்போது உதைபந்தாட்டம் ஆடக்கூடும்.

ஜெனியின் அப்பா பேசுவதை நிறுத்திவிட்டு, சாராயப் போத்தலைச் சுட்டிக்காட்டி “கொஞ்சம் குடிக்கிறாயா?” என்றார். கள்ளமாக எப்போதாவது பியரின் சாரலில் நனையும் என்னை இந்த மனுஷன் மகா சாகரத்தில் என்னை மூழ்கடிக்கப்பார்க்கிறான். நான் நெளிந்தேன். என் சங்கடத்தை உணர்ந்த ஜெனி என்னை அங்கிருந்து விடுவித்து கூட்டிக் கொண்டு சென்றாள்.

ஜெனி தன் சகோதரர்களை எனக்கு அறிமுகப் படுத்தினாள் அவர்களுடைய பெயர்கள் ஜெனியுடையதைப் போன்று அவ்வளவு சுருக்கமானதாகவோ நாக்குக்கு இதமானதாகவோ இருக்கவில்லை. எனவே அந்த நிமிஷத்திலேயே அவர்களுடைய பெயர்களை நான் மறந்து விட்டேன்.

அவர்கள் என்னை நடனமாடுவதற்கு அழைத்தார்கள். நான் வாழ்க்கையில் முதன் முதலாக நடனமாடிய பெருமையை அந்த வீடு பெற்றிருக்கும். – ஜெனி மட்டும் அவர்களைத் தடுத்திராவிட்டால்.

“அவரைக் கஷ்டப்படுத்தாதீர்கள்” என்று ஜெனி உரத்துச் சொன்னதாக ஞாபகம். பிறகு அவர்கள் எனக்குப் பாடத் தெரியுமா? என்று கேட்டார்கள். எனக்குப் புரிந்தது. போகப் போக என்னிடம் “குதிரை ஏற்றம் தெரியுமா?, குஸ்தியடித்துக் காட்டுவாயா? என்றெல்லாம் கேட்பார்கள் போல் இருந்தது.

கர்ணகடூரமான சத்தத்தில் ‘கெஸற்’ ப்ளேயரில் ஒரு சிங்களப்பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அறுபடப் போகும் ஆடுகளின் அலறல் சத்தத்தில் தான் ஒவ்வொரு நாள் காலையிலும் என் நித்திரை குலைவது வழக்கம்.

என் அயலவர்கள் சந்தையில் ஆடு அறுப்பவர்களாக இருந்தார்கள். சாகப்போகும் அந்த ஆடுகளின் அலறல்களுக்கும் இந்தச் சிங்களப் பாடகனின் அலறலுக்கும் அவ்வளவு வித்தியாசம் இருக்கவில்லை. ஆடுகளுக்கு நேர்ந்ததைப் போலவே பாடகனின் கழுத்துக்கும் யாராவது வெட்டரிவாளி வைத்திருந்தனரோ?

நான் மெதுவாக ஓர் இடுக்குப் பார்த்து நழுவி வெளியே வந்தேன். அங்கு மாமரத்து நிழலில், சாய்வு நாற்காலியொன்றில் ஒரு நடுத்தர வயதுப் பெண் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தாள். என் காலடி ஓசை கேட்டதும் தலையை லேசாகத் திரும்பிப் பார்த்து

“உனக்கு என்னவேணும்?” என்று ஆங்கிலத்தில் கேட்டாள். அவளுடைய கையிலிருந்த சிகரெட் எனக்குப் பயத்தைத் தந்தது. அந்தச் சிகரெட் ஒரு மந்திரக்கோல் போல் இருந்தது. அவள் என்னைக் கல்லாக மாற்றிவிடும் சக்தி படைத்த சூனியக்காரி மாதிரி கிறக்கத்துடன் சிரித்தாள்.

“நான் ஜெனியின் சினேகிதப் பையன்”

அவள் தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசிக் கொண்டேயிருந்தாள்.

ஜெனியின் அப்பா கால்பந்தாட்டத்தைப் பற்றி விளாசித்தள்ளியதைப் போல இவளும் தன் கூடைப்பந்தாட்ட அனுபவங்களைச் சொல்லப் போகின்றாளோ என எண்ணினேன். எனக்கு எத்தனை ஆங்கில சொற்கள் புரிந்திருக்கும் என்பது பற்றியோ அல்லது என் பதில் குறித்தோ அவள் அவ்வளவு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவள் ஒரு வாளுடனும் – நான் ஒரு சவரக் கத்தியுடனும் ஆங்கிலப்போர் புரியத் தொடங்கிய மாதிரி இருந்தது.

‘என்னவொரு கஷ்டத்துக்குள் நான் மாட்டிக் கொண்டேன்’ உள்ளே போனால் உதைபந்தாட்டமும்!, நடனமும்! வெளியே வந்தால் சாய்வு நாற்காலியில் ஆங்கிலம்! நான் குற்றுயிரும் குலையுயிருமாகி வீரமரணம் அடையுமுன் நல்லவேளையாக ஜெனி அங்கு வந்து சேர்ந்துவிட்டாள்.

“இவதான் என்னுடைய அம்மா” என்று ஜெனி சொன்னாள். அப்போதும் அவளுடைய அம்மா தன் ஆங்கிலத்தையும், சிகரெட்டையும் கைவிடத் தயாராயில்லை.

அங்கு நான் நிற்பது ஜெனிக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ என்னை அவள் அழைத்துக் கொண்டு வீட்டின் பின்புறம் போனாள். அங்கு கொய்யா மரங்கள் நின்றன. அவள் ஒரு கிளையை வளைத்தாள். நீர்த்துளிகள் சொட்டின. அவளுக்கும் எனக்குமாக இரண்டு கொய்யாக் காய்களைப் பறித்துக் கொண்டேன். கொய்யா சாப்பிடத் தொடங்கினோம்.

“என்ன சொல்லாமல் கொள்ளாமல் வெளியே வந்துவிட்டீர்கள்?”

நான் ஒரு மரக்கிளையில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். மூச்சுத்திணறல் இப்போது அடங்கி இயல்பு நிலைக்கு வந்தது போல் இருந்தது.

“ஜெனி எனக்கு இதிலெல்லாம் விருப்பமில்லை”

“உங்களுக்கு எதில்தான் விருப்பமென்று சொல்லுங்கள் பார்ப்போம்”

“என் விருப்பம் ஒரு பக்கம் கிடக்கட்டும் ஜெனி. உன்னுடைய விருப்பம் என்னவென்று முதலில் சொல்லு”

“சொன்னால் பகிடி பண்ணக்கூடாது எனக்கு விருப்பம் இதுதான் ஓடவேணும். ஓடவேணும் ஓடிக்கொண்டே இருக்கவேணும். என்னுடைய பள்ளிக்கூடம் எத்தனை மைல் இருக்கும்? பதினாறு மைல்? பஸ்ஸில் ஏறாமல் அவ்வளவு தூரத்தையும் ஓடியே கடக்கவேண்டுமென்று எனக்கு எவ்வளவு கொள்ளைஆசை தெரியுமா?”

மழை லேசாகத் தூறலடித்துக் கொண்டிருந்தது. எனக்கு நல்ல ஞாபகம், அந்த வீட்டு முற்றத்தில் நிறைய மஞ்சள் நிற வண்ணத்துப்பூச்சிகள் அங்குமிங்கும் பறந்தபடி இருந்தன. நான் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன். பள்ளத்தில் போய் என் தலை மறையும் வரைக்கும் அவர்கள் கைகளை அசைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவளுடைய வீட்டிற்கு அதற்குப் பிறகு நான் போகவில்லை. அவளுடைய வீட்டிற்குப் போவதற்கு முன் மூன்று விஷயங்களில் தேர்ச்சியடைய வேண்டுமென்று விரும்பினேன். ஒன்று நடனம், மற்றது கால்பந்தாட்டம் பற்றிய ஆழமான அறிவு, அடுத்தது அவளுடைய அம்மாவுடன் பேச முற்றுப்புள்ளி இடம் பெறாத ஆங்கிலம்.

கொஞ்சக்காலம் பிறந்த தினங்கள், கிறிஸ்துமஸ், புதுவருட காலங்களில் வாழ்த்து மடல்களை ஆளுக்காள் பாரிமாறிக் கொள்வதில் மட்டுமே ஜெனியுடனான சினேகிதம் நிலைத்திருந்தது. ஒரு காலகட்டத்தில் அவளுடைய பிறந்த தினம் ஜூன் முப்பதிலா அல்லது ஜூலை முப்பதிலா என்ற குழப்பம் எனக்கு ஏற்பட்டு, அந்த வருடம் அவளுக்கு பிறந்தநாள் வாழ்த்துமடல் அனுப்பாமலேயே ஆகிவிட்டது. வெறும் வாழ்த்து மடல்களுக்குள் ஊசலாடிக்கொண்டிருந்த எங்கள் சினேகிதம் திடீரென ஒருகட்டத்தில் அறுந்தது போலவும் ஆகிவிட்டது.

இப்போது பத்து வருஷங்களின் பின்னர் எதிரும் புதிருமாக இருக்கின்றோம். “கூளாமரம் இன்னும் நிற்கிறதா?” என அவள் கேட்கின்றாள்.

“எழுபத்தெட்டில் அடித்த புயல் உனக்கு ஞாபகமிருக்கிறதா? அதில் அந்தக் கூளாமரம் சாய்ந்து விட்டது” என்றேன். “உன்னை வழியனுப்புவதற்கு; கூட யாரும் வரவில்லையா?” என்று நான் கேட்டேன்.

“யார் இருக்கிறார்கள்? அப்பா நோயாளி. அம்மா எங்களை விட்டு ஓடும்போது என் கடைசித் தம்பிக்கு ரெண்டு வயது தங்கச்சிகள் ஒவ்வொருவனைக் கொழுவிக்கொண்டு கழன்று கொண்டார்கள். தம்பி ஒருவன் பொலிஸ் வேலை கிடைத்தது தான் தாமதம் கண்காணாத ஊரில் போய்க் கல்யாணம் பண்ணிக் கொண்டான். என்னைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்?”

அவள் நெகிழ்ந்து போய் திடீரென விம்மத் தொடங்கினாள். நான் அவள் முகத்தை நேருக்கு நேர் பார்க்கச் சக்தியற்றவனானேன்.

“நான் வெளியில் போவதைத் தவிர எனக்கு வேறு மார்க்கமில்லை அப்பா அவ்வளவு கடன்பட்டுவிட்டார்”

நான் கண்களை மூடிக்கொண்டேன். பள்ளிக் காலத்தில் நூறு மீற்றர் வீராங்கனையாக ஓடும் அந்த ஜெனியை நான் நினைத்துப் பார்த்தேன். மை–தானத்தின் ஆரவாரம் அவளை ஒரு காலத்தில் ஓட வைத்தது. இப்போதும் ஓடுகிறாள். வாழ்வின் துன்பங்கள் அவளைத் துரத்திக்கொ–ண்டிருக்கின்றன. அவளுக்கு ஏதோ வகையில் ஆறுதல் சொல்ல வேண்டும் போல் எனக்குத் தோன்றியது. ஆனால் அவளுக்காக உள்ளுக்குள் அழுது வடியும் என் மௌனத்தின் மேன்மையை வெறும் வார்த்தைகள் கொச்சைப்படுத்திவிடுமோ என்று அஞ்சினேன்.

அதன்பிறகு அவள் இறங்க வேண்டிய நிலையம் வரும் வரைக்கும் நான் எதுவும் பேசவில்லை.

அவள் இறங்கி என்னிடம் விடைபெற்றுக் கொண்டு போனாள். ரயில் மேடையில் நின்ற நூற்றுக்கணக்கான மனிதர்களிடையே அவள் கலந்து என் பார்வையிலிருந்து மறைந்து போனாள். ரயில் நகரத் தொடங்கிற்று. ஐந்து நிமிஷங்களில் நான் இறங்க வேண்டிய இடமும் வந்துவிடும்.

**முற்றிற்று.**

# உழைப்பாளி

நீ
உழைப்பாளி

உண்ணவும்
உழைக்கவும்
உன்னியே
சரணடைய
பலரிருப்பார்

பால் பட்ட
உன் நெஞ்சு
அவர்களை
பாவமென்று
சொல்லும்

தேனாய்க் கொட்டி
தேவைகள்
தீர்த்திடுவார்

உன்னை கசப்பாய்
நினைக்கும்
அவர் முன் ~ நீ
இனிப்பாய்

எறும்புகள் போல்
தின்று ~ உன்னில்
பசி தீர்ப்பார்
பதப்படுத்துவார்

நீ எஞ்சிய
உணவு

உன்னை
தூக்கிச் செல்ல
எறும்புகளாய்
வருவார்

அவர்களிடம்
புழுக்கள்
வேட்டையாடியுனை
அபகரிக்கும்

உன் உழைப்பு
காற்றோடு
கரைந்து விடும்

உனை
இனியார்
பேசுவார்
காற்றாகிப்
போனவுனை
இனி யார்?
பேசுவார்




# உன் நண்பன்

நண்பா!
உனக்கொரு கடிதம்

என்னுள் விழித்துக் கொள்
என்னைத் தொட்டுத் திருப்பு

உன் விழி கொண்டு
என் வரி தேடு

அவைகளுள் ஆராய்ந்தவற்றை
சற்றுத் தர்க்கித்துக் கொள்

மடமைகளை
களைத்து விடு

அவைகளுக்குத்
தாழ்ப்பாள் போட்டு
தத்துவார்த்தம் பேசு

நண்பா!

என்னைப் புரட்டிப்
பார்த்தவர்கள்தான்
இவ்வுலக வரலாற்றையே
புரட்டிப் போட்டவர்கள்

அதனால்
என்னை முழுவதுமாகப்
படி!

நான் ஆயிரம் சிறைச்சாலைகளை
அடைக்கிறேன் ~ நீ
ஒரு அறிவுக் கதவையேனும்
திறந்து விடு

இப்படிக்கு ~ உன்
நண்பன் புத்தகம்.




# குமரிக்கண்டம் பற்றி..

குமரிக் கண்டம்.. நாம் இந்த வார்த்தையை வாழ்க்கையில் ஒருமுறையாவது நிச்சயம் கேட்டிருப்போம்.. இந்தக் கண்டம் இயற்கை பேரழிவு காரணமாக கடலுக்குள் மூழ்கியது என்பது அனைவருக்கும் தெரியும்.. ஆனால் கடலுக்கடியில் மூழ்கிப் போன இந்த கண்டத்தில் 20,000 ஆண்டுகால தமிழர் வரலாறு சத்தமின்றி உறங்கிக் கொண்டிருக்கிறது. ஆம்.. இதுகுறித்த பல சுவாரஸ்ய தகவல்களை தற்போது பார்க்கலாம்..

இதற்கு முன்பு நீரில் மூழ்கிய அட்லாண்டிஸ் மற்றும் துவாரகாவைப் போலவே, குமரிக் கண்டமும் இந்தியப் பெருங்~ கடலில் மூழ்கியதாகக் கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் தொடங்கி ஆஸ்திரேலியா, அந்தமான், இலங்கை ,மாலத்தீவு போன்ற அனைத்து நாடுகளும் சேர்ந்ததே குமரிக் கண்டம் என்று அறிவியலாளர்களால் அழைக்கப்படுகிறது. இதன் கடல்வழிப்பாதை ஆசியா முதல் ஆப்பிரிக்கா வரை சென்றதாகவும் கூறப்படுகிறது. ஆம், இதுதான் நாவலன் தீவு என்று அழைக்கப்பட்ட "குமரிப் பெருங்கண்டம் 20,000 ஆண்டுகளுக்கு முன்பு பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்த ஒரு கண்டம். இன்று தனித்தனி நாடுகளாக உள்ள ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், தென்னாப்பிரிக்கா, இலங்கை,மற்றும் கிழக்கில் உள்ள சில சிறு, சிறு தீவுகளை இணை~ த்த ஒரு பிரம்மாண்ட நிலப்பரப்பு தான் "குமரிக்கண்டம்". இது ஒரு காலத்தில் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த ஒரு மாபெரும் தமிழ்க் கண்டம்..

இந்த நிலப்பகுதி இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் தெற்கே ஒரு மாபெரும் நிலப்பகுதியாக இருந்ததாகக் கருதப்படுகி~ றது. பண்டைய தமிழர் நாகரிகத்துடன் தொடர்புடைய ஒரு முக்கியமான நிலப்பகுதியாகவும் பார்க்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக பாண்டியர்களுடன் நெருங்கிய தொடர்புடையது.பாண்டிய நாட்டில் கூறப்படும் புராணக் கதைகள் குமரிக்கண்டம் இருந்ததற்கு மேலும் வலு சேர்க்கிறது. குமரிக்கண்டம் பாண்டிய மன்னர்களினால் ஆளப்பட்டது என்று தமிழ் அறிஞர்கள் கூறுகின்றனர். மேலும் தமிழர்கள் நாகரிகத்தின் தொட்டில் என்றும் இது அழைக்கப்படுகிறது.

குமரிக்கண்டத்தில்தான் முதன்முதலில் மனிதர்கள் தோன்றியிருக்க வேண்டும் என்று வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நம் மூதாதையர் வாழ்ந்ததும், நம் தாய்த் தமிழ் பிறந்ததும் இங்கே தான். இன்னும் பல வரலாற்று அதிசயங்கள் நிகழ்ந்துள்ளன. ஆம், இன்று தனித்தனி நாடுகளாக உள்ள ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், தென்னாப்பிரிக்கா, இலங்கை,மற்றும் கிழக்கில் உள்ள சில சிறு, சிறு தீவுகளையெல்லாம் இணைத்தவாறு இருந்த ஒரு பிரம்மாண்ட நிலப்பரப்பு தான் குமரிக்கண்டம்.

ஏழுதெங்க நாடு, ஏழுமதுரை நாடு, ஏழுமுன்பலை நாடு, ஏழுபின்பலை நாடு, ஏழுகுன்ற நாடு, ஏழுகுணக்கரை நாடு, ஏழு~ குரும்பனை நாடு என இந்நிலப்பரப்பில் 49 நாடுகள் இருந்துள்ளன. பறுளி, குமரி என்ற இரண்டு மாபெரும் ஆறுகள் ஓடியுள்ளன. குமரிக்கொடு, மணிமலை என இரண்டு மலைகள் இருந்துள்ளன. தென்மதுரை, கபாடபுரம், முத்தூர் என பிரம்மாண்டமான 3 நகரங்கள் இருந்தன.

மேலும் குமரிக்கண்டதை ஆண்ட பாண்டிய மன்னர்கள் மூன்று தமிழ்ச் சங்கங்களை நிறுவியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் அவையாவன :

## தலைச்சங்கம்

குமரிக்கண்டத்தின் தலைநகராக விளங்கிய தென் மதுரையில் கி.மு. 7000 ஆண்டுகளுக்கு முன்னர் தலைச்சங்கம் எனப்படும் முதல் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது என்றும் அகத்தியர் உள்ளிட்ட 549 புலவர்கள் தமிழை ஆராய்ந்தனர் என்றும் தெரிகிறது. சிவன், முருகன் ஆகிய கடவுள்களின் தலைமையில் முதல் தமிழ்ச்சங்கம் செயல்பட்டது என்றும் அதில் குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் குபேரன் முதல் தமிழ்ச்சங்கத்தில் இருந்தார் என்றும் தெரிகிறது. தலைச்சங்கம் 4440 ஆண்டுகள் நிலைத்திருந்ததாகவும், 4449 புலவர்கள் இருந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. அகத்தியர் எழுதிய அகத்தியம் எனும் நூல் தலைச்சங்கத்தில் அரங்கேறியது என்பது பொதுவாக நிலவும் கருத்து. கி.மு. 2387 ஏற்பட்ட முதல் கடற்கோளால் பஃறுளி ஆறும் பன்மலை அடுக்கும் முழுவதும் அழிவுற்றன.

## இடைச்சங்கம்

கபாடபுரம் என்ற தலைநகரம் இருந்த இடத்தில் இடைச்சங்கம் எனப்படும் இரண்டாம் தமிழ்சங்கம் கி.மு. 2387 முதல் கி.மு. 306 ஆண்டுகள் வரையில் சுமார் 2000 ஆண்டுகள் செயல்பட்டதாகத் தெரிகிறது. கபாடபுரதில் 59 தமிழ் மொழிப் புல~ வர்கள் அங்கிருந்தபடி தமிழ் மொழிப்பணி ஆற்றியதாகவும் இறையனார் அகப்பொருள் கூறுகிறது. இது மூன்றாம் கடல்கோளால் அழிந்தது.

## கடைச்சங்கம்

மூன்றாவது தமிழ் சங்கமான கடைச்சங்கம் என்பது கி.மு. 400 முதல் கி.பி. 200 ஆண்டு வரை என்று கூறப்படுகிறது. கடைச் சங்கம் உத்தர மதுரையில் இருந்ததாக கூறப்படுகிறது. தொன்மையான தமிழ் நூல்களின் வாயிலாக மொத்தம் நான்கு கடல்கோள்கள் நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது. ஆயினும் நூலின் வாயிலாக கிடைக்கப்பெற்ற இந்தத் தகவல்களை உறுதிப்படு~ த்தும் வகையில் ஆராய்ச்சியாளர்களுக்கு எந்த ஒரு தடயமும் இது வரை கிடைக்கவில்லை. அதே சமயத்தில் இந்தக் குறி~ ப்புகளை அறிவியல் முறைப்படி மறுக்கவும் இயலவில்லை. இறையனார் அகப்பொருள் உரையில் கூறியுள்ளது உண்மையாக இருந்தால் தமிழர்களின் இலக்கிய காலம் சுமார் கி.மு 10,500 ஆண்டுகள் முன்பு நோக்கி செல்லும்.

புலவர் நக்கீரரின் உரையில் கடலில் மூழ்கிய குமரிக் கண்டத்தின் நிலப்பரப்பு குறித்த தகவல்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. குமரிக் கண்டத்தின் நிலப்பரப்பு பற்றி முதன் முதலில் சிலப்பதிகாரத்தில்தான் குறிப்புக்கள் காணப்படுகின்றன. வடக்கில் பஃறுளி ஆறிலிருந்து தெற்கில் குமரி ஆற்றின் கரை வரைக்கும் குமரிக் கண்டம் நீண்டிருந்ததாக இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர் இந்தியப் பெருங்கடலில் 1960 ஆம் ஆண்டு செய்த ஆராய்ச்சியில் கன்னியாகுமரிக்குத் தெற்கே இரண்டு கண்டங்கள் இருந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகளை கண்டுபிடித்துள்ளதாகச் சொல்கிறார்கள். மேலும் தென்பகுதிக் கடலடியில் நீண்ட மலைத்தொடர் ஒன்று இருப்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள். ஆயினும் இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் குமரிக்கண்டம் இருந்தது பற்றி அறுதியிட்டு உறுதியாகக் கூறவில்லை. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த பனி யுகத்தின் போது இந்தியப் பெருங்கடலில் கடல்நீர் மட்டம் குன்றிக் குமரிக் கண்டம் முழுவதும் வெளியே இருந்திருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

எனவே மேலும் குமரிக்கண்டம் குறித்த பல ஆராய்ச்சிகள் பாதியிலே நிறுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றன.

ஒரு வேளை முழுமையான ஆய்வு செய்தால் குமரிக்கண்டம் குறித்தும் தமிழர்களின் வரலாறுகள் குறித்தும் பல பிரம்மி~ ப்பூட்டும் தகவல்கள் வெளியாகலாம்..

**சிவனேஸ்வரன் தாரணி. தி/விபுலானந்தா கல்லூரி.**




தாய்ப்பாலூட்டல் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்குமான உரிமையாகும். தாய்ப்பால் எல்லா குழந்தைகளுக்கும் கொடுக்க முடியும். ஒவ்வொரு தாய்மார்களும் குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டுவதற்கு நூறுவீதம் முயற்சி செய்ய வேண்டும்.

தாய்ப்பாலூட்டலின் நன்மைகளை நாம் அறிந்திருந்தும், இன்னும் பல குழந்தைகளுக்கு தாய்ப்பால் போதுமான அளவு ஊட்டப்படுவதில்லை. போதுமான அளவு என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதல் ஆறு மாதங்களுக்கு தனித்தாய்ப்பால் ஊட்டப்படுவதில்லை. பின்னரும் பல விதமான செயற்கை பால் மாக்களையும் சேர்ப்பதனால் சரியான அளவில் தாய்ப்பாலூட்டல் நடைபெறுவதில்லை.

இதற்கான காரணங்கள் பல உள்ளன எமது தாய்மாருக்கு தாய்ப்பால் ஊட்டலில் பல சந்தேகங்கள் உள்ளன. எனது தாய்ப்பால் குழந்தைக்கு போதுமாக இருக்காது என்று முன்கூட்டியே நினைத்து விடுவார்கள். இதனால் குழந்தை ஆரோக்கியமாக வளர்வதற்கு தாய்ப்பாலுடன் மேலதிகமாக மாப்பால் ஊட்டுவதன் மூலம் எனது குழந்தை செழிப்பாக வளரும் என நினைக்கிறார்கள். இவ்வாறாக அவ நம்பிக்கையினால் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதில் பெரிய தடங்கல்களை எதிர் கொள்கிறார்கள்.

அடுத்ததாக குழந்தை அழும் வேளைகளில் அது பாலுக்காகவே தான் அழுகிறது என்று நினைப்பதும் தவறாகும். குழந்தை பாலுக்காக மட்டுமன்றி வேறு பல காரணங்களினால் அழலாம். உதாரணமாக சிறுநீர் கழித்தபின் நனைந்து இருப்பதனால், வயிற்று நோவினால், சூழல் வெப்பநிலை காரணமாக வியர்வை அதிகமாக இருப்பதனால், இவ்வாறான பல காரணங்களினால் அழலாம். குழந்தைக்கு பால் போதாவிடின் குழந்தை சிறுநீர் கழிப்பது குறைவாக காணப்படும். சாதாரண குழந்தை ஒரு நாளைக்கு ஆறு தடவை அதாவது 24 மணித்தியாலங்களில் 4 மணித்தியாலங்களுக்கு 1 தடவை சிறுநீர் கழிக்க வேண்டும். மேலும் குழந்தைக்கு போதுமான அளவு தாய்ப்பால் கிடைக்கும் பொழுது அந்தக் குழந்தை நாளுக்கு நாள் நிறை அதிகரிப்பை காட்டும். சிறுநீர் கழிப்பது குறைவு அல்லது நாள் நிறை அதிகரிப்பு குறைவாக இருந்தால் அல்லது நிறை அதிகரிப்பு நடைபெறாது இருந்தால், குழந்தைக்கு போதுமான அளவு தாய்ப்பால் இல்லை என்று கருதலாம்.

தாய்ப்பாலூட்டல் முலம் குழந்தைக்கு வேண்டிய போசணைப் பதார்த்தங்கள், நோய் எதிர்ப்பு சக்தி இலகுவாக கிடைக்கிறது. மூளை வளர்ச்சி சிறப்பாக அமைகிறது. தாய் சேய் பிணைப்பு ஏற்படுகிறது. தேவையற்ற விதத்தில் ஏற்படுகின்ற தொற்று தடுக்கின்றது. தாயைப் பொறுத்தவரையில் பிரசவத்தின் பின்னரான தாயின் பிரசவ இரத்தப் பெருக்கு பாலூட்டலினால் குறைகின்றது. மார்பக புற்றுநோய் எதிர்காலத்தில் வராமல் பாதுகாக்கிறது.

குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்காவிடின் மாப்பாலை சூப்பியால் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதனால் தொற்றுக்கள் ஏற்படும் அபாயமும் உண்டு. ஆகவே போத்தலையும் சூப்பியையும் உரிய முறையில் தொற்று நீக்கவேண்டியதும் அவசியமாகும்.


உலக சுகாதார ஸ்தாபனம் ஒவ்வொரு குழந்தையும் பிறந்த முதல் மணித்தியாலத்தில் இருந்து 6 மாதம் வரை தனித்தாய்ப்பால் மட்டுமே உட்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது. ஆகவே தாய்ப்பாலைத் தவிர நீரோ, குளுக்கோசோ, சீனி தண்ணியோ வேறும் எந்த பதார்த்தங்களையோ முதல் ஆறு மாதங்களுக்கு கொடுக்கக்கூடாது. முதல் ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பாலையே குடிக்க கொடுக்க வேண்டும். விதிவிலக்காக அமைவது அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருக்கும் வேளைகளில் அவர்களுக்கு கொடுக்கும் மருந்துகளும் அவர்கள் நிறை குறைவாக அல்லது குறை மாதமாக பிறந்திருந்தால் அவர்களுக்கு கொடுக்கும் விற்றமின்கள் கனியுப்புக்கள் ஆகிய சொட்டு மருந்துகளை தவிர வேறு எதையும் கொடுக்கக் கூடாது. குழந்தை பிறந்து ஒரு மணி நேரத்துக்குள் அவர்களுக்கு முதலாவதாக தாய்ப்பால் ஊட்டுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இவ்வாறாக ஒரு மணித்தியாலத்துக்குள் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் அதிக காலம் வரை தாய்ப்பால் குடிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.


முதல் தடவை தாய்ப்பாலூட்டும் தாய்மாருக்கு பல பிரச்சனைகள் ஏற்படலாம். அவற்றுள் முக்கியமானது அவர்கள் குழந்தையை அணைத்து பிடிக்கும் விதமும் குழந்தையானது மார்பின் முலைக்காம்பை கவ்வி பிடிக்கும் விதமும் ஆகும். இவற்றை ஆங்கிலத்தில் பொசிஷனிங் மற்றும் அட்டாச்மெண்ட் என்று கூறுவார்கள். இவற்றை தாதியர்கள் தாய்க்கு நன்கு விளங்கும் வண்ணம் சொல்லிக்கொடுக்க வேண்டும். தாய்மார் அதை சரியாக செய்யாதவிடத்து குழந்தை முலைக்காம்பை சரியாக கவ்வி பிடிக்க முடியாது இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் குழந்தைக்கு பாலை சரியாக உறிஞ்சிக் குடிக்க முடியாது காணப்படும். இதன்போது தாய்க்கு முலைக்காம்பில் வலி ஏற்படலாம். பாலை சரியாக குடிக்காவிட்டால் மார்பகத்தில் பால் கட்டுப்படலாம். இதனால் குழந்தைக்கு பால் கொடுப்பதில், மன உளைச்சல் ஏற்படுவதுடன், பலர் தாய்ப்பால் ஊட்டுவதை விட்டுவிட்டு மாப்பாலூட்டுவதற்கு மாற நினைப்பார்கள். இவ்வாறான தாய்மாருக்கு நன்கு உற்சாகமூட்டி சரியான செய்முறைகளை கற்பிப்பதன் மூலம் தாய்ப்பாலூட்டல் தோல்வி அடையாமல் தடுக்க முடியும். இவ்வாறாக தாய்ப்பாலூட்டலை உற்சாக படுத்துவதற்கும் தாய்மாரை உற்சாகப்படுத்துவதற்கும், சரியான செய்முறையை பயிற்றுவிப்பதற்கும் அதற்கென சிறப்பு தேர்ச்சி பெற்ற தாதிமார் இலங்கையின் ஒவ்வொரு தள வைத்தியசாலைகளிலும் அதற்கு மேல்தரத்திலுள்ள வைத்தியசாலைகளிலும் இருக்கிறார்கள்.தாய்ப்பாலூட்டுதலையும், மாப் பாலூட்டுதலையும் ஒரே நேரத்தில் செய்து கொண்டு போகலாம் என்று பலர் நினைப்பது தவறானதாகும்.

மாப்பாலை ஊட்டும் பொழுது தாயில் உறிஞ்சி குடிப்பதை விட சூப்பில் உறிஞ்சி குடிப்பது இலகுவானது. இதனால் குழந்தை சூப்பியில் பாலை உறிஞ்சி குடிக்கவே விரும்பும். அத்துடன் தாயின் பாலை உறிஞ்சி குடிக்க நாட்டம் இருக்காது. இதன் காரணமாக தாய்ப்பால் சுரப்பதும் குறைந்து கொண்டு போகும். குழந்தை உறிஞ்சிக் குடிக்கும் வீதத்திற்கு ஏற்ப தாய்ப்பால் சுரப்பும் அதிகரிக்கும்.

உறிஞ்சும் அளவு குறைவதனால் தாய்ப்பால் சுரப்பது குறைந்து கொண்டு போகும். ஆகவேதான் குழந்தையின் ஆரோக்கியத்தை விரும்பும் பெற்றோர் சூப்பியில் பால் கொடுப்பதை தவிர்த்து கொள்ளுதல் நல்லது. தற்காலிகமாக மாப்பால் கொடுக்க வேண்டிய அவசர தேவை ஏற்படின் அதை ஒரு கப் அல்லது ஒரு சிறு கரண்டியால் கொடுக்கலாம். படத்தை பார்க்கவும்.

தாய்ப்பால் சுரப்பை எவ்வாறு அதிகரிப்பது என்று பலரின் கேள்வி? விலைகூடிய மாப்பாலைக் தாய் குடித்தால் அதிகமாக பால் சுரக்கும் என்ற கருத்தும் உள்ளது. ஆனால் சாதாரண நிறை உணவை உண்பதால் தாயினால் தாய்ப்பால் நன்கு கொடுக்க முடியும். தாய் குழந்தைக்கும் சேர்த்து உணவருந்த வேண்டி இருப்பதனால் தனது உணவின் அளவைக் கூட்டிக்கொள்ள வேண்டும். முக்கியமாக மாச்சத்து அதாவது சோறு, புரதச்சத்து மீன் அல்லது முட்டை, விட்டமின்களும் கனியுப்புக்களும் நிறைந்த பழங்கள், கொழுப்புச்சத்தை அதிகரிப்பதற்காக உணவுடன் எண்ணேய் போன்றவற்றை உண்ணவேண்டும். அத்தோடு நீர் அதிகமாக பருக வேண்டும். இவற்றைச் சரியாக செய்தால் தாய்ப்பால் ஊட்டுவதற்கு வேண்டிய போசாக்கு தாய்க்குக் இயல்பாகவே கிடைக்கும். அத்தடன்மார்பகங்களுக்கு ஒத்தனம் கொடுக்கலாம். முதுகில் முள்ளந்தண்டின் இரண்டு பக்கங்களையும் மசாஜ் பண்ணலாம். மார்பகங்களைச் சீப்பினால் வருடி குழந்தை தாயின் மார்பகங்களை கட்டிப் (வருடி) பிடிப்பது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தலாம். இவற்றின் மூலம் தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கலாம் என்று அறியப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக ஒரு குறுகிய காலப் பகுதிக்கு வைத்திய ஆலோசனையுடன் சில மருந்துகளை பாவிப்பதன் மூலம் தாய்ப்பால் சுரப்பை கூட்டலாம். இது நீண்ட காலத்திற்கு சரி வராது. நீண்டகாலத்தில் தாய்ப்பால் சுரப்பதை கூட்டுவதற்கு தாய்ப்பாலை குழந்தை உறிஞ்சிக் குடிப்பதே மிகச்சிறந்த தூண்டுதலாக அமையும். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க முடியாத சந்தர்ப்பங்கள் மிக குறைவாகவே உள்ளன. புற்றுநோய்க்கு மருந்து செய்துகொண்டிருக்கும் ஒரு தாய் அம்மருந்து குழந்தையை பாதிக்கும் என்பனால் தாய்ப்பாலூட்டுதலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதைப்போன்ற இன்னும் சில காரணங்கள் உள்ளன. ஆனால் அவற்றை பற்றி அதிகம் யோசிக்க தேவை இல்லை. உண்மையான காரணங்கள் இருப்பின் வைத்திய ஆலோசனைப்படி செய்ய முடியும்.இலங்கை தாய்ப்பாலூட்டுதலில் உலகத்திலேயே முதலிடம் வகிக்கின்றது. ஆனால் எங்களுடைய பிராந்தியத்தில் தாய்ப்பாலூட்டல் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. ஆகவே எங்களுடைய பிராந்தியத்திலுள்ள தாய்மாருக்கு தாய்ப்பாலின் முக்கியத்துவத்தையும் அதன் புனிதத் தன்மையையும் சுட்டிக்காட்ட வேண்டியது எமது கடமையாகும்.



பொசிஷனிங்(Positioning) மற்றும் அட்டாச்மெண்ட்(attachment) என்று கூறுவார்கள்





03 ஆம் பக்க தொடர்ச்சி...

# பல்லினத் தன்மையை உரத்துச் சொன்ன ஆளுமைக் குரல்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல், நாடு நாடாகவே இருக்க மாட்டா தென்ற கருத்தை உலகம் முழுக்க உரக்கச் சொன்னவர் மங்கள என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீதி வழங்கப்பட வேண்டும் என்று பகிரங்கமாக தெரிவித்து வந்த அவர், அந்த மக்களுக்கு நஷ்ட ஈடும் வழங்க வேண்டுமென வலியுறுத்தி வந்தார். இவருடைய இந்தக் கொள்கை, சிங்களக் கடும்போக்காளர்களையும் பெரும் பான்மையின அரசியல்வாதிகளையும் ஆத்திரமடையச் செய்தது. அதற்காக அவர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை.

இனவாதத்துக்கு எதிராக தனது குரலை ஓங்கி ஒலிக்கச்செய்த மங்கள, எப்போதும் சிறுபான்மை மக்களின் நலனில் இன வாதம் இல்லாது அக்கறையுடன் செயல் பட்ட முக்கிய சிங்கள அரசியல்வாதி என்று சொல்லலாம்.

தமிழ் மக்கள் மத்தியில் மங்கள எப்போதும் ஒரு நேர்மையான அரசியல்வாதியாகவும் சிரேஷ்ட தலைவராகவும் இடம் பிடித்திருந்தார். யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லாத நிலையில், தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் நல்லுறவை பேணிய மங்கள, தனது வரையறைக்குள் இருந்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தே வந்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த பொருளாதார கண்காட்சிக்கு சென்றிருந்த மங்களவுக்கு, எதிர்பாராத வரவேற்பு கிடைத்தது.காட்சி கூடத்துக்குள் வந்தவர்கள் எல்லாம் மங்களவை ஆரவாரத்தோடு வரவேற்று செல்பிகளை எடுத்து குவித்தனர். அவருடன் செல்பி எடுத்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் யுவதிகள். இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், தமிழ் மக்கள் மத்தியில் மங்களவுக்கு இருக்கும் செல்வாக்கு, நாட்டின் தலை சிறந்த தலைவர் ஒருவருக்கு ஒப்பானதாகவே இருந்தது. இன்னும் ஒரு பாணியில் சொன்னால், மங்கள என்றும் தமிழர்கள் மத்தியில் ஹீரோ.

புலம்பெயர் நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களை அச்சமின்றி இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்த அவர், தமிழர் பிரதேசங்களில் முதலீடுகளை செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்தார். நல்லாட்சிக் காலத்தில் இந்த அழைப்பு சாத்தியமாக இருந்தாலும், பின்னர் அது கைவிடப்பட்டது.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர், நாட்டின் பல பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் தூண்டிவிடப்பட்ட போதும், வன்மங்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட போதும், அதனை எதிர்த்து சிங்கள மக்கள் செறிந்து வாழும் மாத்தறையில் ஆர்ப்பாட்டம் செய்தவர் மங்கள. ஈஸ்டர் தாக்குதலால் ஆத்திரத்தில் இருந்த சிங்களவர்கள் மங்களவுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். “முஸ்லிம்கள் இந்த நாட்டு பிரஜைகள். அவர்களை அவமதிக்க இடமளியேன்” என ஆணித்தரமாக பதிலளித்த துணிச்சல் மிகுந்த அரசியல்வாதி அவர்.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தியது. மனித உரிமை மீறல்களுக்கும் யுத்த மீறல்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டும் என்ற நிலையில், அதற்கு இணை அனுசரணை வழங்குவதற்கு, அப்போதைய வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீர இணக்கம் தெரிவித்து ஒப்பமிட்டிருந்தார். இதற்கு சிங்கள கடும்போக்காளர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

சர்வதேச அரங்கில் இலங்கையை காட்டிக் கொடுத்து விட்டார் என மங்கள மீது குற்றம்சாட்டப்பட்டது. நல்லாட்சி முடிவுக்கு வந்ததும் தற்போதைய பொது ஜன பெரமுன அரசு பதவியேற்றது. முதல் வேலையாக, இணை அனுசரணையில் இருந்து முற்றாக விலகுவதாக புதிய அரசாங்கம் அறிவித்தது. அரசின் இந்த நகர்வை விமர்சித்த மங்கள, இலங்கையின் முடிவு பாதிப்பை ஏற்படுத்தும் என கவலை தெரிவித்திருந்தார்.

மங்களவைப் பொறுத்த வரைக்கும் ஆரம்ப காலம் தொட்டே, மனித உரிமை செயல்பாட்டாளராகவே இருந்தவர்.

1988, 1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மங்கள இறங்கி செயல் பட்டார். ரணசிங்க பிரேமதாஸ தலைமையிலான அரசாங்கக்காலத்தில் ரோகண விஜயவீர தலைமையிலான ஜேவிபி, தனது இரண்டாவது கிளர்ச்சியை உக்கிரமாக முன்னெடுத்துக் கொண்டிருந்த காலப் பகுதியில், கலவரத்தை அடக்குவதற்காக கூறி, அரசதரப்பு மனித உரிமை மீறல்களும் இருந்தன. இந்த மீறல்களை ஐநா வரை கொண்டு செல்ல மஹிந்த ராஜபக்ஷவுடன் (இப்போதைய பிரதமர்) இணைந்து போராடியவர் மங்கள சமரவீர. இதன்போது பலதடவைகள் உயிர்அச்சுறுத்தல்களுக்கும் உள்ளானார். என்றாலும், பிரேமதாச அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை வெளிக் கொணர்வதில் இருந்து அவர் பின்வாங்கவில்லை.

இலங்கை ஒரு பன்முகத்தன்மை உள்ள நாடாக இருக்கவேண்டும் என்பதில் மங்கள சமரவீர உறுதியுடன் செயல்பட்டவர்.

**எம். பி அந்தஸ்து இல்லாத ஒருவருக்கு குவிந்திருக்கும் அனுதாபங்கள் துடிப்பானதோர் அரசியலுக்கு அங்கீகாரம்**

பல்லினம், பன்மதம், பன்மொழி கொண்ட நாடாகவே இருக்க வேண்டும் என்பதை தனது கொள்கையாகக் கொண்டிருந்த மங்கள, நாட்டின் அதிகாரப்பூர்வ கொள்கையாக இது மாற வேண்டும் என்பதை பொது வெளியில் பல தடவை சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில், பன்முகத்தன்மையை மதிக்கும் ஒரு நாடு எப்போதும் உச்சத்தில் இருக்கும் என்பது நடைமுறை யதார்த்தம்.

இனங்களையும் மதங்களையும் பிரித்து ஒன்றோடொன்று மோத விட்டு பிரித்தாளும் தந்திரத்தில் நாட்டை ஆண்டு வந்ததன் பிரதி பலன்களை நாம் இப்போது அறுவடை செய்து கொண்டிருக்கிறோம். பன்முகத் தன்மையுடன் நாடு ஆளப்படும் போதுதான், தேசப்பற்றும் நல்லிணக்கமும் தானாகவே ஏற்படும். அந்த அரசியல் விஞ்ஞானத்தை தன்னகத்தே கொண்டு இருந்தவர் மங்கள.

இலங்கை அரசியலில் பல்வேறு பரிமாணங்களை கொண்டிருந்த இவர், அமைச்சுப் பொறுப்புக்கள் மூலம் பல்வேறு மாற்றங்களையும் திருப்பங்களையும் ஏற்படுத்தி, எதிரணியினரையும் மூக்கில் கை வைக்க செய்த பெருமைக்கு உரியவரானார்.

வெளிவிவகார அமைச்சராக இருந்த போது, சர்வதேச நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்தி தனிப்பட்ட ரீதியிலும் அதனை வளர்த்துக் கொண்டார். பன்முகத் தன்மையுள்ள நாட்டை உருவாக்க வேண்டும் என்ற மங்களவின் கொள்கையை அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டன.

உண்மையை உள்ளபடி எடுத்துப் பேசும் துணிவுடனான ஆற்றல், எல்லோருக்கும் வருவதில்லை. மங்கள அரசியல் கட்சிகளில் இருந்தும், அரசாங்கங்களில் இருந்தும் சற்று ஒதுக்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.

என்றாலும், மங்களசம்பிரதாய அரசியல் வாதியாக இல்லாமல், நவீனத்தையும் இணைத்து புதிய அரசியல் கலாசாரத்தை முன்னெடுத்தவர் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை.

அவர் மீதான பல்வேறு விமர்சனங்களுக்கு அப்பால், அவருடைய அரசியல் சகல தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கு உலகளாவிய ரீதியில் இருந்து குவிந்த அனுதாபச் செய்திகளை சான்றுகளாக கொள்ளலாம்.

பாராளுமன்ற உறுப்பினர் அந்தஸ்து கூட இல்லாத ஒருவருக்கு, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் இருந்து அனுதாபங்கள் தெரிவிக்கப்பட்டன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ் கட்சித் தலைவர்கள், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் உட்பட பல அரசியல் பிரபலங்கள் அனுதாபச் செய்திகளை வெளியிட்டதோடு, அவரது அரசியல் ஆளுமையை புடம் போட்டுக் காட்டியிருப்பது, மங்கள ஒரு பேராளுமையுள்ள அரசியல் தலைவர் என்பதற்கு அங்கீகாரமாகும்.

அரசியலில் நேர்மையும், துணிச்சலும், மாறாத கொள்கைளுடனும் மங்கள சமரவீர செயல்பட்டி ருந்தாலும், எதுவுமே சாத்தியப்படாமல் கற்பனாவாதமாகவே முடிவடைந்திருக்கிறது.

சந்திரிகா அம்மையார் கூறியிருப்பது போல, மங்கள நீங்கள் நடத்திய போராட்டங்களும் உங்களது மாறாத கொள்கையும் என்றும் உயிர்ப்புடன் இருக்கும்.

04 ஆம் பக்க தொடர்ச்சி...

# பனங்காடு வைத்தியசாலை ஸ்தம்பித்ததேன்?

*கடந்த 22ஆம் திகதி முதல் வழமைக்கு திரும்பியதுடன் வைத்திய சேவைகளும் இடம்பெற்று வருகின்றன.*

*பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி. சுகுணனின் தலைமையிலான அரச வைத்திய அதிகாரிகள், கல்முனை பிராந்திய கிளை சங்கத்தின் தலைவர் எம்.சி.எம். மாஹிர், சங்கத்தின் செயலாளர் வைத்தியர் எம்.வை.எம்.மாஹிர் மற்றும் பாதிக்கப்பட்ட வைத்தியர் யு.எல்.எம். சஹீல், வைத்தியர் ஜாரியா, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.ஜயலத், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், மற்றும் கிராம மக்கள் இணைந்து, கடந்த 21ஆம் திகதி வைத்தியசாலையில் மேற்கொண்ட கலந்துரையாடலின் பயனாக இத்தீர்மானம் எட்டப்பட்டது.*

*இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், அரச வைத்திய அதிகாரிகள் கல்முனை பிராந்திய கிளை சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதன் பயனாக, வைத்தியசாலையின் சேவைகளை வழமைக்கு கொண்டுவர இணக்கப்பாடு காணப்பட்டது.*

* *24 மணிநேரமும் வைத்தியசாலைக்கான பாதுகாப்பை பொலிசார் மற்றும் இராணுவத்தினர் வழங்கல்,*
* *குற்றம் செய்தவருக்கு தண்டனை பெற்றுக்கொடுத்தல்,*
* *இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாத வகையில் நடந்து கொள்ளல்,*
* *வைத்தியசாலை ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்கல்,*
* *அத்தோடு, குறித்த பகுதியில் வாழும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கல்,*
* *சம்மந்தப்பட்டவர்கள் பகிரங்க மன்னிப்பு கோரல்*

*போன்ற பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் வைத்தியர் சேவைக்கு திரும்ப விருப்பம் தெரிவித்தார். இதனால், வைத்திய சேவைகள் வழமைக்கு திரும்பின .*

*இதேநேரம், பல விட்டுக்கொடுப்புக்களின் அடிப்படையில் வைத்திய சேவைகள் இடம்பெற முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் இது போன்ற சம்பவங்கள் இனிவரும் காலங்களில் நடந்தால் வைத்திய சேவைகள் யாவும் ஸ்தம்பிதம் அடையும் என பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி. சுகுணன் கூறினார். மேலும் வைத்தியசாலை கட்டட அபிவிருத்திக்கு மேலதிகமாக 50 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.*

*அத்தோடு, வைத்தியசாலை அபிவிருத்திக்குழு பொறுப்புடன் செயற்படவில்லை என தெரிவித்த அவர், குறித்த குழு உடனடியாக புதுப்பிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.*

*எவ்வாறாயினும், தாமும் ஆலையடி வேம்பு பிரதேசத்தில் வாழும் பொது மக்களும் சம்பவம் தொடர்பில் கவலை அடைந்துள்ளதுடன் சம்பவத்திற்கு எதிராக கடும் கண்டத்தை தெரிவிப்பதாகவும் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் கூறியதுடன் தாமும் விலகிக் கொள்வதாக கூறினர்.*

*இதேநேரம், வைத்தியரை தாக்கியவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன் குறித்த பிரதேச மக்களையும் அவர்களுக்கு பொறுப்பாகவுள்ள மதகுருவையும் அழைத்து வந்து மதகுரு மூலமாக வைத்தியரிடம் மன்னிப்பு கேட்க வைப்பதற்கான நடவடிக்கையினை பனங்காடு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஆர். சுவர்ணராஜ் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர்.*

*இதன் பயனாக அவர்களும் இன்று வைத்தியசாலைக்கு சென்று வைத்தியர் உள்ளிட்ட ஊழியர்களிடம் கிராமம் சார்பாக மன்னிப்பு கோரினர்.*

*இதேநேரம், குறித்த விடயம் தொடர்பில் அரசியல் தலைவர்களான முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன், அம்பாறை மாவட்ட பாராளு-மன்ற உறுப்பினர் த. கலையரசன் மற்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ராஜன் உள்ளிட்டவர்களும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கலந்துரையாடியதுடன் பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி. சுகுணனின் நடவடிக்கை காரணமாக வைத்திய சேவைகள் வழமைக்கு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.*